ஆத்மாக்களுடைய ஸ்வரூபம்: தேஹேந்த்ரியமந: ப்ராணபுத்தி விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாய், அணுவாய், அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஜ்ஞாநாஶ்ரயமாய், ஈஶ்வரனுக்கு நியாம்யமாய், தார்யமாய், சேஷமாயிருக்கும்.

ஆத்மஸ்வரூபம், தேஹாதிவிலக்ஷணமானபடியென்னென்னில், என்னுடைய தேஹம்; என்னுடைய இந்த்ரியம்; என்னுடைய மநஸ்ஸு; என்னுடைய ப்ராணன்; என்னுடைய ஜ்ஞாநம் என்று மமதா புத்திக்கும் மமதாவ்யவஹாரத்துக்கும் ஹேதுவாய் நானென்கிறதற்குப் பொருளான ஆத்மாவுக்கு வேறாய்த் தோற்றுகையாலே தேஹாதிகளைக்காட்டில் வேறாயிருக்கிறது.

அஜடமாகையாவது: ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கை.

ஆநந்தரூபமாகையாவது: ஸுகரூபமாயிருக்கை.

நித்யமாகையாவது: ஸர்வகாலத்திலுமிருக்கை. ஸர்வகாலத்திலுமுண்டாகில் ஜந்மமரணங்கள் உண்டாகிறபடியென்னென்னில், ஜந்மமாவது, தேஹஸம்பந்தம்; மரணமாவது, தேஹவியோகம்.

அணுவாகையாவது 𑌬𑍃-உ॥ 𑌹𑍃𑌦𑌿 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾॥ என்றும், 𑌬𑍃-உ॥ 𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑍇𑌨𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍍𑌟𑍋 𑌵𑌾 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍋 𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌶𑌰𑍀𑌰𑌦𑍇𑌶𑍇𑌭𑍍𑌯𑌃॥ என்றும், கௌ-உ॥ 𑌯𑍇 𑌵𑍈 𑌕𑍇 𑌚𑌾𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑌮𑍇𑌵 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿॥ என்றும், 𑌬𑍃-உ॥ 𑌤𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌪𑍁𑌨𑌰𑍇𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑍈 𑌲𑍋𑌕𑌾

யகூசேஷ்ணே॥ என்றும், ப்ரு-உ॥ హృదిహ్యేవాయమాత్మా॥ என்றும், ப்ரு-உ॥ తేనప్రద్యోతేనైష ఆత్మానిష్క్రామతి చక్షుష్టోవామూర్ధ్నోవా అన్యేభ్యోవాశరీరదేశేభ్యః॥ என்றும், கௌ-உ॥ యేవైకేచాస్మాల్లోకాత్ప్రయన్తి చన్ద్రమసమేవతే సర్వేగచ్ఛన్తి॥ என்றும், ப்ரு-உ॥ తస్మాల్లోకాత్పునరేత్యస్మైలోకాయకర్మణే॥ என்றும், ஹ்ருதயப்ரதேசத்தி லிருப்பதாகவும், ஹ்ருதயத்திலிருந்து புறப்படுகிறதாகவும், புண்யலோகாதிகளுக்குப் போகிறதாகவும், புண்யாநுபவாதிகளானபின்பு மீளவும் வருவதாகவும், வேதாந்தங்கள் சொல்லுகையாலே அணுவாகக் கடவது. விபுவாகில் இவையொன்றுங் கூடாது. ப்ரஹ்மஸூத்ரத்தில் ஸ்ரீவேதவ்யாஸபகவானும் உத்க்ராந்திகத்யாகதீநாம்॥ ఉత్క్రాన్తిగత్యాగతీనాం॥ என்று உத்க்ரமித்துப் போவது வருவதாயிருப்பதினுல் ஆத்மா அணுவாகக்கடவதென்று முதலில் ஸதித்தார். ஏஷோணுராத்மா சேதஸாவேதிதவ்ய:॥ ఏషోఽణురాత్మాచేతసావేదితవ్యః॥ என்று முண்டகோபநிஷத்திலும் பாலாக்ரஶதபாகஸ்ய ஶததாகல்பிதஸ்ய ச பாகோஜீவஸ்ஸ விஜ்ஞேய:॥ వాలాగ్రశతభాగస్యశతధాకల్పితస్యచభాగోజీవస్యవిజ్ఞేయః॥ என்று ஶ்வேதாஶ்வதரோபநிஷத்திலும், ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநாநந்தைகலக்ஷணம் த்ரஸரேணுப்ரமாணாஸ்தே ரஶ்மிகோடிவிபூஷித:॥ స్వరూపమణుమాత్రంస్యాత్ జ్ఞానానందైకలక్షణం త్రసరేణుప్రమాణాస్తే రస్మికోటివిభూషితః॥ என்று விஷ்வக்ஸேநஸம்ஹிதையிலும் ஆத்மாக்களுடைய அணுத்வத்தைச் சொல்லியிருக்கிறது. ஆத்மாக்கள் அணுஸ்வரூபர்களாய் ஹ்ருதய ப்ரதேசத்திலிருந்து விட்டால் சரீரமெங்குமொக்க வுண்டாகிற ஸுகதுக்கங்களை யநுபவிக்கிற தெப்படியென்னில், ஸூர்யன் தீபம் ரத்நாதிகள், ஒவ்வொரு ப்ரதேசத்திலிருந்தபோதிலும் அவற்றின் ப்ரபை சுற்றில் - எங்கும் வ்யாபிக்கிறப்போலே ஆத்மா ஹ்ருதய ப்ரதேசத்தி லிருக்கச்செய்தேயும் அவ்வாத்மாவின் ஜ்ஞாநப்ரபை எங்குமொக்க வ்யாபிக்கையாலே சரீரமெங்குமொக்க வுண்டாகிற ஸுகதுக்கங்களை யனுபவிக்கயாதொருவிரோதமுமில்லை. பூதங்களாலும் ப்ராணதி வாயுக்களாலும் நாடிகளாலும் ஸஹகரிக்கப்பட்ட இந்த்ரியங்களின்வழியாய் ஆத்மாக்கள் ஞ்ஜாநத்தால் வ்யாபித்து ஸர்வத்தையும் அறிந்தநுபவிப்பதை கௌஷீதகி உபநிஷத்தில் விசதமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. அதெங்ஙனேயென்னில்.

𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌵𑌾𑌚𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌵𑌾𑌚𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌘𑍍𑌰𑌾𑌣𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌘𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑍍𑌯𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌾𑌞𑍍𑌛𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌜𑌿𑌹𑍍𑌵𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌰𑌸𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌹𑌸𑍍𑌤𑍌 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑍇𑌣 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇 𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌪𑌸𑍍𑌥𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌉𑌪𑌸𑍍𑌥𑍇𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌰𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂 𑌚𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌪𑌾𑌦𑍌 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌪𑌾𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌗𑌤𑍀𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑌾 𑌧𑌿𑌯𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌧𑌿𑌯𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥

ప్రజ్ఞయా వాచం సమారుహ్య వాచా సర్వాణినామాన్యాప్నోతి॥
ప్రజ్ఞయా ఘ్రాణం సమారుహ్య ఘ్రాణేన సర్వాన్ గన్ధానాప్నోతి॥
ప్రజ్ఞయా చక్షుస్సమారుహ్య చక్షుషా సర్వాణిరూపాణ్యాప్నోతి॥
ప్రజ్ఞయా శ్రోత్రం సమారుహ్య శ్రోత్రేణ సర్వాఞ్ఛబ్దాన్యాప్నోతి॥
ప్రజ్ఞయా జిహ్వాం సమారుహ్య జిహ్వయా సర్వాన్రసానాప్నోతి॥
ప్రజ్ఞయా హస్తౌ సమారుహ్య హస్తాభ్యాం సర్వాణికర్మాణ్యాప్నోతి॥
ప్రజ్ఞయా శరీరం సమారుహ్య శరీరేణ సుఖదుఃఖేఆప్నోతి॥
ప్రజ్ఞయోపస్థం సమారుహ్య ఉపస్థేనానందం రతిం ప్రజాంచాప్నోతి॥
ప్రజ్ఞయా పాదం సమారుహ్య పాదాభ్యాం సర్వాణిగతీరాప్నోతి॥
ప్రజ్ఞయా ధియం సమారుహ్య ధియా విజ్ఞాతవ్యం కామానాప్నోతి॥

ஆத்மா ஜ்ஞாநத்தாலே வாக்கில் ப்ரவேசித்து வாக்கால் ஸர்வ சப்தங்களையுஞ் சொல்லுகிறானென்றும், ஜ்ஞாநத்தாலே க்ராணேந்த்ரியத்தில் வ்யாபித்து க்ராணத்தால் ஸர்வகந்தங்களையும் அறிந்தநுபவிக்கிறானென்றும், ஜ்ஞாநத்தாலே நேத்ரங்களில் வ்யாபித்து நேத்ரங்களால் ஸர்வரூபங்களையும் பார்க்கிறானென்றும், ஜ்ஞாநத்தாலே ஶ்ரோத்ரேந்த்ரியத்தில் வ்யாபித்து ஶ்ரோத்ரத்தால் ஸர்வசப்தங்களையும் க்ரஹிக்கிறானென்றும், ஜ்ஞாநத்தாலே நாக்கில் வ்யாபித்து

நாக்காலே ஸர்வரஸங்களையும் அறிந்தநுபவிக்கிறானென்றும், ஜ்ஞாநத்தாலே கைகளில் வ்யாபித்து கைகளாலே ஸர்வகார்யங்களையும் பண்ணுகிறானென்றும், ஜ்ஞாநத்தாலே சரீரத்தில் வ்யாபித்து சரீரத்தால் ஸுகதுக்கங்களை யறிந்தநுபவிக்கிறானென்றும், ஜ்ஞாநத்தாலே உபஸ்தத்திலே வ்யாபித்து உபஸ்தத்தால் ஆநந்தரதியையும் பிள்ளைகளையு மடைகிறானென்றும், ஜ்ஞாநத்தாலே பாதங்களில் வ்யாபித்து பாதங்களாலே நடக்கிறானென்றும், ஜ்ஞாநத்தாலே புத்தியில் வ்யாபித்து புத்தியால் அறியவேண்டியவைகளையறிந்து கோரிக்கைகளை யடைகிறானென்றும் சொல்லியிருப்பதேயாம். ஸௌபரியைப்போன்ற யோகிகள் ஏககாலத்திலே அநேகதேஹங்களைப் பரிக்ரஹிக்கிறதும் ஜ்ஞாநவ்யாப்தியாலே.

அவ்யக்தமாகையாவது: கடபடாதிகளை (கடம் - பானை. படம்- வஸ்த்ரம்.) க்ரஹிக்கிற கண்முதலிய இந்த்ரியங்களுக்குத் தோற்றாதிருக்கை.

அசிந்த்யமாகையாவது: அசித்தோடு ஸஜாதீயமென்று நினைக்கக்கூடாதிருக்கை.

நிரவயவமாகையாவது: விஜ்ஞாநமய:॥ 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃॥ என்று தைத்தரீயோபநிஷத்திலும் விஜ்ஞாநவந:॥ 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌘𑌨𑌃॥ என்று ப்ருஹதாரண்யோபநிஷத்திலும் ஜ்ஞாநஸ்வரூபனென்று சொல்லுகையாலே அசித்வஸ்துக்களைப்போலே அவயவக்கூட்டமின்றிக்கேயிருக்கை.

நிர்விகாரமாகையாவது: அசித்தைப்போலே விகாரப்படுதலின்றிக்கே ஸதா ஏகரூபமாயிருக்கை: இப்படியிருக்கையாலே ஆயுதங்களாலே சேதிப்பதற்கும், அக்நியாலே தஹிப்பதற்கும், ஜலத்தாலே நனைப்பதற்கும், காற்று வெய்யில் முதலானவைகளால் உலரச்செய்வதற்கும் கூடாமலிருக்கும்.

ஜ்ஞாநாஸ்ரயமாகையாவது: ஜ்ஞாநத்துக்கிருப்பிடமாயிருக்கை. ஆத்மா, ஜ்ஞாநத்துக் கிருப்பிடமன்றிக்கே கேவலம் ஜ்ஞாநமாத்ரமாயிருந்தால் நான் அறிவு என்று தன்னை ஜ்ஞாநமாத்ரமாகச் சொல்லுகையொழிய நான் அறியாநின்றேனென்று தன்னை ஜ்ஞாதாவாகச் சொல்லக்கூடாது. ஜ்ஞாதாவென்றபோதே கர்த்தா - போக்தாவென்னுமிடஞ் சொல்லிற்றாயிற்று; கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஜ்ஞாநாவஸ்தா விசேஷங்களாகையாலே. சாங்க்யமதஸ்தர், ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வமுள்ளது; ஆத்மாவுக்கில்லையென்றார்கள். அப்பொழுது

ஆத்மாக்களுக்கு சாஸ்த்ர வஶ்யதையும் போக்த்ருத்வமுங் குலையும். 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌫𑌲𑌂𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌰𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍॥ శాస్త్రఫలంప్రయోక్తరి కర్తాశాస్త్రార్థవత్త్వాత్॥ என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் சொன்னபடி பலபோக்தாக்களான ஆத்மாக்களைக் கர்த்தாக்களாக அங்கீகரியாதபோது சாஸ்த்ரங்கள் வ்யர்த்தங்களாய்ப் போகவேண்டிவரும். மேலும் வேதவேதாந்தங்களில் 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌟𑍋𑌮𑍇𑌨 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌕𑌾𑌮𑍋 𑌯𑌜𑍇𑌤। జ్యోతిష్టోమేన స్వర్గకామో యజేత। என்றும் 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌾𑌸𑍀𑌤॥ ముముక్షుర్బ్రహ్మోపాసీత॥ என்றும் ஸ்வர்க்கபலபோக்தாக்களையும் மோக்ஷபல போக்தாக்களையும் கர்த்தாக்களாகச் சொல்லியிருக்கையாலே, பலபோக்தாக்களே கர்த்தாக்களாகவேண்டும். ஸர்வேஶ்வரன் ஸ்வர்க்க மோக்ஷ பலங்களை அந்தந்த அதிகாரிகளுக்குக் கொடுக்கத்தக்கவனேயன்றி வேறன்று.

அசேதநமான ப்ரக்ருதிக்கும் கர்த்ருத்வத்தைச் சொல்லக்கூடாது. ஏனெனில், 𑌶𑌾𑌸𑌨𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂॥ శాసనాచ్ఛాస్త్రం॥ என்றிருக்கையால். சாஸநமாவது ப்ரவர்த்தநம். சாஸ்த்ரத்துக்கு ப்ரவர்த்தகத்வம், ஜ்ஞாந ஜநக த்வாரத்தாலே. அசேதநமான ப்ரக்ருதிக்கு சாஸ்த்ரங்களை போதித்து ஜ்ஞாநத்தை யுண்டாக்க முடியாதன்றோ. ஆகையால், சாஸ்த்ரங்கள் ப்ரயோஜநத்தை யடையும்போது போக்தாவான சேதநனுக்கே கர்த்ருத்வங்கொள்ளவேண்டும். அந்தக் கர்த்ருத்வம் ஸ்வாதீநமோ ஈஶ்வராதீநமோவென்னில், அந்தக்கர்த்தாவுக்கு தர்மமான ஜ்ஞாந இச்சா ப்ரயத்நங்கள் பகவததீநங்களாயிருக்கையாலும் அந்த ஜ்ஞாநாதிகள் பகவதநுமதியொழிய க்ரியாஹேது வாகமாட்டாமையாலும், 𑌪𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍇𑌃॥ పరాత్తుతచ్ఛ్రుతేః॥ என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் சொல்லியிருக்கிறபடி ஆத்மாவினுடைய கர்த்ருத்வம் ஈஶ்வராதீநமென்கிறது. ஆத்மாக்களுடைய புத்தி பூர்வகமான ப்ரயத்நத்தை யபேக்ஷித்து ஈஶ்வரன் அநுமதிபண்ணுகையாலே, அந்த க்ரியாநிபந்தநமான புண்யபாபங்களும் ஆத்மாக்களுக்கேயாகின்றன, கர்த்ருத்வம் பரமாத்மாதீநமானாலும் விதிநிஷேதசாஸ்த்ரங்களுக்கு விரோதம்வாராது. 𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌹𑌿𑌤𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌵𑍈𑌯𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑌃॥ కృతప్రయత్నాపేక్షస్తు విహితప్రతిషిద్ధావైయర్థ్యాదిభ్యః॥ என்று ப்ரஹ்ம

ஸூத்ரத்தில் பரிஹரிக்கப்படுகையாலே. அதாவது, விதித்தவைக ளுக்கும் விலக்கினவைகளுக்கும் விரோதம் வாராமைக்காக ஆத்மா க்கள்செய்த ப்ரதம ப்ரயத்நத்தை யபேக்ஷித்துக்கொண்டு ஈஶ்வ ரன் ப்ரவர்த்திப்பிக்கை. எப்படியென்னில், எல்லா ஆத்மாக்களுக் கும் ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஸ்வபாவமான வைகளாகையாலே, ஸாதாரணமாய் ப்ரவர்த்தி சக்தி, நிவர்த்தி சக் திகள் உண்டாயேயிருக்கும். இப்படிப்பட்ட ஆத்மாக்களுடைய ஸ்வ ரூபத்தை நிர்வஹிக்கைக்காக, 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃॥ య ఆత్మని తిష్ఠన్ ఆత్మనోஅంతరో యమాత్మా న వేద యస్యాత్మా శరీరం య ఆత్మానమంతరో యమయతి స త ఆత్మాంతర్యామ్యమృతః॥ என்று ஸுபாலோப நிஷத்திற்சொன்ன படி ஈஶ்வரன் அந்தர்யாமியாய் நில்லாநிற்கும். இந்த ஆத்மாக்கள் அவ்வோபதார்த்தங்களி லுண்டான ஜ்ஞாநேச்சா ப்ரயத்நங்களை யுடையவர்களாய்க்கொண்டு ப்ரவர்த்தியா நிற்பர்கள். மத்யஸ்தனு கையாலே உதாஸீநனைப்போலேயிருக்கிற .பரமாத்மா, ஆத்மாக்க ளுடைய பூர்வவாஸநாநுரூபமான விதிநிஷேத ப்ரவர்த்தியிலே அநுமதியையும், அநாதரத்தையும் உடையனாய்க்கொண்டு விஹி தங்களிலே அநுக்ரஹத்தையும் நிஷித்தங்களிலே நிக்ரஹத்தையும் பண்ணி புண்யத்துக்குப்பலமான ஸுகத்தையும், பாபத்துக்குப் பல மான துக்கத்தையும் ஆத்மாக்களுக்குக் கொடாநிற்கும். ஆனால், 𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵 𑌸𑌾𑌧𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌯𑌤𑌿 𑌤𑌂 𑌯𑌮𑍇𑌭𑍍𑌯𑍋 𑌲𑍋𑌕𑍇𑌭𑍍𑌯 𑌉𑌨𑍍𑌨𑌿𑌨𑍀𑌷𑌤𑌿 𑌏𑌷 𑌏𑌵 𑌅𑌸𑌾𑌧𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌯𑌤𑌿 𑌤𑌂 𑌯𑌮𑌧𑍋 𑌨𑌿𑌨𑍀𑌷𑌤𑌿॥ ఏష హ్యేవసాధుకర్మ కారయతి తం యమేభ్యోలోకేభ్య ఉన్నినీషతి ఏషఏవఅసాధుకర్మ కారయతి తంయమధో నినీషతి॥ என்று கௌஷீதகீ யுபநிஷத்தில் ஸர்வேஶ்வரனே ஸாதுகர்மங்களை யும் அஸாதுகர்மங்களையும் பண்ணுவியாநிற்கு மென்கிறவிது சே ரும்படி யெங்ஙனெனன்னில், இது ஸர்வஸாதாரணமன்று; யாவனொ ருவன் பகவத்விஷயத்தில் அதிமாத்ரமான ஆநுகூல்யத்திலே வ்யவ ஸ்திதனாய்க்கொண்டு ப்ரவர்த்தியாநிற்கும்; அவனை அநுக்ரஹியாநின் றுகொண்டு பகவான்தானே, ஸ்வப்ராப்த்யுபாயங்களாய் அதிகல்யா ணங்களான கர்மங்களிலே ருசியை ஜநிப்பிக்கும். யாவனொருவன் அதிமாத்ர ப்ராதிகூல்யத்திலே வ்யவஸ்திதனாய்க்கொண்டு ப்ரவர்த் தியாநிற்கும்; அவனை ஸ்வப்ராப்தி விரோதிகளாய் அதோகதிஸாத

நங்களான கர்மங்களிலே அந்வயிப்பிக்கும் என்று இந்த ஸ்ருதிவாக்யங்களுக்கு அர்த்தமாகையாலே. இந்த அர்த்தத்தை ஸர்வேஸ்வரன் தானே, பகவத்கீதையில், அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமந்விதா:॥ అహం సర్వస్య ప్రభవో మత్తస్సర్వం ప్రవర్తతే ఇతి మత్వా భజంతే మాం బుధా భావసమన్వితాః॥ என்று தொடங்கி, தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா॥ తేషాం సతతయుక్తానాం భజతాం ప్రీతిపూర్వకం దదామి బుద్ధియోగం తం యేన మాముపయాంతి తే తేషామేవానుకంపార్థ మహమజ్ఞానజం తమః నాశయామ్యాత్మభావస్థో జ్ఞానదీపేన భాస్వతా॥ என்று அநுகூலர்களை அநுக்ரஹிக்கிற ப்ரகாரத்தையும், அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீஶ்வரம்॥ అసత్యమప్రతిష్ఠం తే జగదాహురనీశ్వరం॥ என்று தொடங்கி, மாமாத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்தோऽப்யஸூயகா:॥ మమాత్మపరదేహేషు ప్రద్విషంతోఽభ్యసూయకాః॥ என்னுமளவாக அவர்களுடைய ப்ராதிகூல்யாதிசயத்தைச் சொல்லி, தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு॥ తానహం ద్విషతః క్రూరాన్ సంసారేషు నరాధమాన్ క్షిపామ్యజస్రమశుభానాసురీష్వేవయోనిషు॥ என்று ப்ரதிகூலரை நிக்ரஹிக்கும் ப்ரகாரத்தையும் அருளிச்செய்தானிறே. ஸ்த்ரீயந்நபாநாதி போக்யங்களை உத்தேசித்து அதை அடையவேணுமென்று செய்கிற ஆத்மாக்களுடைய வ்யாபாரத்தாலுண்டான கர்த்ருத்வம், ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிவந்ததன்று; ஸத்வரஜஸ்தமோ குணங்களையுடைய ப்ரக்ருதி ஸம்ஸர்க்கத்தால் வந்தது. ஆத்மஸ்வரூபத்தைப்பற்றின கர்த்ருத்வமாவது: பரப்ரஹ்மாநுபவமும் அவ்வநுபவத்தாலுண்டான ப்ரீதியினால் ப்ரேரிதனாய் பரப்ரஹ்மாநந்தாபிவிர்த்திக்காகச் செய்கிற கைங்கர்யமுமாம்.

ஜ்ஞாநாஸ்ரயமாகில் சாஸ்த்ரங்களிலே ஆத்மாவை ஜ்ஞாநமென்று சொல்லுவானென்னென்னில், ஜ்ஞாநத்தையொழியவும் ஆத்மா தன்னையறிகையாலும், ஜ்ஞாநம் ஸாரபூதகுணமாய் நிரூபகதர்மமாகையாலும் சொல்லிற்று.

நியாம்யமாகையாவது: சரீரத்தினுடைய ஸகல ப்ரவ்ருத்திகளும் சரீரியான ஆத்மாவினுடைய புத்யதீநமாக வுண்டாமாபோலே சரீரபூதனான ஆத்மாவினுடைய ஸகல வ்யாபாரங்களும் சரீரியான பரமாத்மாவினுடைய புத்யதீநமாக வுண்டாயிருக்கை. அப்படி யுண்டாயிருந்தபோதிலும் அசேதநமான சரீரம்போலே தானாக ஒரு ப்ரவ்ருத்தி பண்ணமாட்டாதபடி யிருக்கையன்றிக்கே, ஜ்ஞாத்ருத்வாதிகளை ஸ்வாபாவிக தர்மங்களாக வுடையராய் அதடியாக ஒன்றை அறியவும் அபேக்ஷிக்கவும் ப்ரயத்நம்பண்ணவும் ஸாமர்த்யமுடையரா யிருக்கையாலே ஸகல ப்ரவ்ருத்திகளிலும் ஆத்மாக்களுடைய ப்ரதம ப்ரயத்நத்தை யபேக்ஷித்து ஈஸ்வரன் அநுமதி பண்ணுகையாலே விதி நிஷேத சாஸ்த்ரங்களுக்கு விரோதமில்லை.

தார்யமாகையாவது: ஏஷ ஸேதுர்விதரண: ஏதத் ஸர்வம் ப்ரஜ்ஞானே ப்ரதிஷ்டிதம்॥ ఏషసేతుర్విధరణః ఏతత్సర్వంప్రజ్ఞానే ప్రతిష్ఠితం॥ என்றும், ஏவமேவாஸ்மிந்நாத்மநி ஸர்வாணி பூதானி ஸர்வ ஏவாத்மாந: ஸமர்ப்பிதா:॥ ఏవమేవాస్మిన్ ఆత్మని సర్వాణిభూతాని సర్వఏవాత్మానస్సమర్పితాః॥ என்றும், ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:॥ ఏతస్యవా అక్షరస్య ప్రశాసనే గార్గి సూర్యచంద్రమసౌవిధృతౌ తిష్ఠతః॥ என்று ப்ருஹதாரண்யகோபநிஷத்து முதலியவைகளில் சொல்லுகிறபடியே ஈஸ்வரன், ஸகலசேதநா சேதநங்களைத் தன் ஸ்வரூபஸங்கல்பங்க ளிரண்டாலும் தரிக்கும் அவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும் நித்ய ஸங்கல்பத்தையும் ஒழிந்தபோது ஆத்மா தன் ஸத்தாஹாநி பிறக்கும்படி யிருக்கை.

சேஷமாகையாவது: சந்தநபுஷ்ப தாம்பூலாதிகளைப் போலே அவனுக்கு இஷ்டமானபடி விநியோகங்கொள்ளுகைக்கு அர்ஹமா யிருக்கை. இவ்விஷயம் யஸ்யாஸ்மி ந தமந்தரேமி॥ యస్యాస్మినతమంతరేమి॥ என்று யஜுர்வேதத்திலும், அபரிமிதநமம பகவதோ தாஸோஹமஸ்மி॥ అపరిమపినమను భగవతపవాహమస్మి॥ என்றும், பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே॥ పరవానస్మి కాకుత్స్థ త్వయివర్షశతంస్థితే॥ என்று ஸ்ரீராமாயணத்திலும், தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:॥ దాసభూతాస్స్వతస్సర్వే

ஸ்வாத்மநஃ பரமாத்மநஃ॥ என்று பகவச்சாஸ்த்ராதிகளிலும் சொல்லப் பட்டிருக்கிறது. ஈஸ்வரவிஷயத்தில் ஆத்மாவுக்குண்டான சேஷத் வந்தான், க்ருஹக்ஷேத்ர புத்ரமித்ர களத்ராதிகளைப்போலே பிரிந்து நிற்கைக்கும் பிரிந்து தோற்றுகைக்கும் யோக்யமாம்படி யிருக்கை யன்றிக்கே சரீரம்போலே பிரிந்திருக்கைக்கும் பிரிந்துதோற்றுகை க்கும் அநர்ஹமாயிருக்கும்.

இந்த லக்ஷணங்களோடே கூடிய ஆத்மாக்கள் பத்தரென் றும், முக்தரென்றும், நித்யரென்றும், மூன்று பகுப்பினரா யிருக் கிறார்கள்.

பத்தராவார்: எள்ளிலிருக்கும் எண்ணெயைப்போலவும், மர த்திலிருக்கும் நெருப்பைப்போலவும் பிரிக்கவொண்ணாதபடி மு க்குணங்களோடு கூடிக்கொண்டு அநாதியாயிருக்கும் பகவந்மாயை யால் மறைக்கப்பட்ட ஸ்வஸ்வரூபத்தை யுடையராய், அநாதியான அஜ்ஞாநத்தாலே ஸம்பாதிக்கப்பட்ட புண்யபாப கர்மங்களாலே சூழப்பட்டு அந்த புண்யபாப கர்மங்களுக் கநுகுணமாக நாநாவித மாயும் விசித்ரமாயுமிருக்கிற தேவ மநுஷ்ய திர்யக் ஸ்த்தாவராதி தேஹங்களிலே ப்ரவேசித்து அந்தந்த தேஹங்களில் நான் என்கிற ஆத்மபுத்தியையும் தேஹஸம்பந்திகளிலே என்னுடையது என்கிற மமதா புத்தியையும்பண்ணி துர்வாஸநாவிவசராய் ஸ்வஸ்வ கர்மா நுகுண ஸுகதுக்கபரம்பரைகளை யநுபவிக்குமவர்கள்.

முக்தராவார்: மோக்ஷருசி ப்ரதிபந்தகமான கர்மவிசேஷங் கள் அநுபவாதிகளாலே யாதல், ஸாமாந்யேந வநுஷ்டிக்கும் ப்ரா யஸ்சித்த கர்மங்களாலே யாதல், அநபிஸம்ஹிதபலமாய் அத்யுத் கடமான ப்ராமாதிக புண்யங்களாலேயாதல் க்ஷயித்து அதடியா க ஜாயமானதசையில் பகவத்கடாக்ஷத்தா லுண்டான ஸத்வோத் ரேகத்தாலே மோக்ஷருசிபிறந்து ஸத்குரு ஸமாஸ்ரயண ஸம்ப்ராப்த வேதாந்தவேத்ய பரப்ரஹ்மஜ்ஞாநராய் தத்ப்ராப்திரூப மோக்ஷ ஸித்யர்த்தமாக கர்மஜ்ஞாநாங்ககமான பக்தியோக மடியாக வரும் பகவத் ப்ரஸாதத்தாலேயாதல், அன்றிக்கே, பகவான் தனது நிர் ஹேதுக ஸௌஹார்த்த விசேஷத்தாலே யாத்ருச்சிகாதி ஸுக்ருத பரம்பரைகளைக் கல்பித்து அதடியாக விசேஷகடாக்ஷம் பண்ணி அநந்தரம் அத்வேஷாபிமுக்யங்களை யுண்டாக்கி ஸாத்விக ஸம்பா ஷணத்தை விளைத்து ஸதாசார்ய ஸமாஸ்ரயணத்தை யுண்டாக்கி ததுபதேசமுகேந தத்வஜ்ஞாநத்தைப் பிறப்பித்தல்; தன்னுடைய விசேஷகடாக்ஷந் தன்னாலே தத்வஜ்ஞாநத்தைப்பிறப்பித்தல் செய்ய

மஹாவிஸ்வாஸ பூர்வகமாக ப்ரபத்நமூலமாகவரும் பகவத்ப்ரஸா தத்தாலேயாதல் ஸாம்ஸாரிக ஸகலதுரிதங்களுங்கழிந்து ஆவிர்ப் பூத ஸ்வரூபராய் பகவதநுபவ கைங்கர்யைகபோகரானவர்கள்.

நித்யராவார்: ஒருநாளும் ஸம்ஸரியாத ஆதிசேஷர் ஸேனைமுத லியார் முதலானவர்கள். அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தராய் பகவத் ஜ்ஞாநத்துக்கு ஒருநாளும் ஸங்கோசமில்லாமையாலே இவர்களை நித்யரென்கிறது.

ஆத்மாக்களுடைய ஜ்ஞாநம்: நித்யமாய், த்ரவ்யமாய், அஜட மாய், ஆநந்தரூபமாய், தர்மமாய், ஸங்கோசவிகாஸங்களுக்கு யோக் யமாய், தன்னையொழிந்தவற்றை ப்ரகாசிப்பிக்கக் கடவதாய், தனக் குத்தான் ப்ரகாசியாதே ஆத்மாவுக்கு ப்ரகாசிக்கக் கடவதாய், விபு வாயிருக்கும்.

பூர்வம் சொன்ன ஸ்வரூபவைலக்ஷண்யத்தையுடைய ஆத்மாக் களுக்கு அவித்யாதி தோஷஸம்பந்தம் எப்படி யுண்டாயிற்றென் னில், நிர்விகாரமாய் சீதளமாயிருக்கிற ஜலத்துக்கு அக்நிஸம்ஸர்க்க முடைய பானையின் ஸம்பந்தத்தால் உஷ்ணம், சப்தம், உத்ரேகம் முதலிய விகாரங்க ளுண்டாகிறாப்போலே ஸ்வதஃ ஜ்ஞாநாநந்த அம லஸ்வரூபனான ஆத்மாவுக்கு ஸத்வரஜஸ்தமோகுணாஶ்ரயமான அசி த்ஸம்பந்தத்தாலே, அவித்யாகர்ம வாஸநாருசிகள் உண்டாயின.

அவித்யையாவது: அஜ்ஞாநம். அது ஜ்ஞாநாநுதயம், அந்யதா ஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநரூபங்களால் அநேகவிதமா யிருக்கும்.

கர்மமாவது: கரணத்ரயத்தாலே பண்ணப்பட்டதாய், புண்யபா பாத்மகமான க்ரியாவிசேஷம். அவற்றுள் புண்யம், ஐஹிகாமுஷ் மிக நாநாவித போகஸாதநங்களாலே பஹுவிதமாயிருக்கும். பாப மும் அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரரூபேண அநந்தமா யிருக்கும்.

வாஸனையாவது: முன்புசெய்து போந்தவற்றிலே மீளவும் மூளு கைக்குறுப்பான ஸம்ஸ்காரம். இதுதான் ஹேதுபேதத்தாலே பஹு விதமாயிருக்கும்.

ருசியாவது: ரஸாந்தரத்தாலும் மீட்கவொண்ணாதபடி ஒன்றிலே செல்லும் விருப்பம், இதுவும் விஷயபேதத்தாலே பஹுவிதமா யிருக்கும்.

ஆத்மாவுக்கு வந்தேறியான இந்த அவித்யாதிகள் எப்போது கழியுமென்னில், காரணநிவர்த்தியுண்டானால் கார்யநிவர்த்தி யாகு

மாபோலே அசித்ஸம்பந்தத்தால் வந்த அவித்யாதிகள், அச்சம்பந்தங் கழிந்தவாறே கழியும் என்று தத்வவித்துக்கள் அருளிச்செய்வர்கள்.

மேலே ஆத்மாவுக்குச்சொன்ன பதின்மூன்று லக்ஷணங்களில் அசித்விலக்ஷணத்வம், அஜடத்வம், ஆநந்தத்வம், அவ்யக்தத்வம், அசிந்த்யத்வம், நிரவயவத்வம், நிர்விகாரத்வம், ஜ்ஞாநாஸ்ரயத்வம் ஆகிற எட்டும் ஜீவேஸ்வர ஸாதாரணம். அணுத்வம், ந்யாம்யத்வம், தார்யத்வம், சேஷத்வம், ஆகிற நான்கும் சிதசித்ஸாதாரணம். நித்யத்வம், தத்வத்ரய ஸாதாரணம். இப்பதின்மூன்றுஞ் சேர்ந்தே ஆத்மாவுக்கு லக்ஷணமாகின்றன. ஆத்மாவுக்கு சேஷத்வத்தோடேகூடின ஜ்ஞாத்ருத்வம், ஸங்க்ரஹமான லக்ஷணம்.

லக்ஷணமாவது: அதிவ்யாப்தி அவ்யாப்தி அஸம்பவம் என்கிற மூன்றுதோஷங்களு மில்லாம லிருக்கவேண்டும். அதிவ்யாப்தியாவது: லக்ஷ்யவஸ்துவைக்காட்டில், அந்யவஸ்துக்களிலும் அந்தலக்ஷணமிருக்கை. அவ்யாப்தியாவது: லக்ஷ்யவஸ்துக்களில் அந்தலக்ஷணம் சிலவற்றுக்கிருந்து சிலவற்றுக்கில்லாமலிருத்தல். அஸம்பவமாவது: லக்ஷ்யவஸ்துக்களில் ஒன்றுக்கும் அந்தலக்ஷணமில்லாமலிருக்கை. இம்மூன்றுதோஷங்க ளில்லாமலிருப்பதெதுவோ, அதுதான் லக்ஷணமென்று சொல்லப்படும். ஆத்மாவுக்குச் சொன்ன பதின்மூன்று லக்ஷணங்களும் ஒன்றாய்க்கூடி ஈஸ்வரனிடத்திலாவது அசித்தினிடத்திலாவது கிடையாது. சேஷத்வத்தோடேகூடின ஜ்ஞாத்ருத்வமும் அவ்வாறே. அதெப்படி யென்னில், சேஷத்வ ஜ்ஞாத்ருத்வங்களிரண்டில் சேஷத்வம், அசித்தினிடத்திலிருக்கிறது; ஜ்ஞாத்ருத்வம் அதனிடத்தில் கிடையாது. ஜ்ஞாத்ருத்வம் ஈஸ்வரனிடத்திலிருக்கிறது; சேஷத்வம் அவனிடத்தில் கிடையாது. இவ்விரண்டுஞ்சேர்ந்து ஆத்மாவினிடத்தி லிருக்கிறபடியால் ஆத்மாவுக்கு இதை லக்ஷணமென்றுசொல்லத்தடையில்லை.

அசித்து, ஜ்ஞாநசூந்யமாய் விகாராஸ்பதமா யிருக்கும். இவ்வசித்து சுத்தஸத்வமென்றும், மிஸ்ரஸத்வமென்றும், ஸத்வசூந்யமென்றும் மூன்றுவிதமாம்.

இவைகளில் சுத்தஸத்வமாவது: ரஜஸ்தமஸுக்கள் கலசாதே கேவலஸத்வமாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்தஜநகமாய், கர்மத்தாலன்றிக்கே கேவலபகவதிச்சையாலே விமாநகோபுரமண்டபப்ராஸாதாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய், நிரவதிகதேஜோரூபமாய், நித்யமுக்தராலும் ஈஸ்வரனாலும் பரிச்சேதிக்கவரிதாய் அநந்தாஸ்சர்யாவஹமாயிருப்பதொன்று.

மிஶ்ரஸத்வமாவது: ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்கள் மூன்றுங் கூடி பத்தசேதநர்களின் ஜ்ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய் அநாத்மாவான தேஹத்தில் ஆத்மபுத்தியும், அஸ்வதந்த்ரமான ஆத்மாவில் ஸ்வதந்த்ரபுத்தியும் அநந்யசேஷமான அவ்வாத்மாவில் அந்யசேஷத்வபுத்தியும், அநீஶ்வரர்களிடத்தில் ஈஶ்வரத்வபுத்தியும் அபுருஷார்த்தங்களில் புருஷார்த்தத்வபுத்தியும் அநுபாயங்களில் உபாயத்வபுத்தியும் தொடக்கமான விபரீதஜ்ஞாநங்களை யுண்டுபண்ணுவதாய், நித்யமாய், ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய், ப்ரதேசபேதத்தாலும், காலபேதத்தாலும் ஸத்ருசமாயும், விஸத்ருசமாயு மிருக்கும் விகாரங்களை யுண்டாக்கக்கடவதாய், மஹதாதிவிகாரங்களைப் பிறப்பிக்கையாலே ப்ரக்ருதியென்றும், ஜ்ஞாநவிரோதியாகையாலே அவித்யையென்றும், விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே மாயையென்றுஞ் சொல்லப்பட்டு அண்டபிண்டங்களுக்குக் காரணமான ப்ருதிவ்யப்தேஜோவாய்வாகாசங்களென்னும் பஞ்ச பூதங்களாயும், சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களென்னும் பஞ்சவிஷயங்களாயும், ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷுஸ் ஜிஹ்வாக்ராணங்களென்னும் ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தாயும், வாக்பாதபாணி பாயூபஸ்தங்களென்னும் கர்மேந்த்ரியங்களைந்தாயும் மநஸ்ஸு ப்ரக்ருதி மஹதஹங்காரங்களாயும்பரிணமித்து இருபத்துநாலு தத்வங்களாயிருக்கும்.

ஸத்வஶூந்யமாவது: காலம். இது ப்ரக்ருதி ப்ராக்ருதங்களினுடைய பரிணமங்களுக்கு ஹேதுவாய் கலாகாஷ்டாதிரூபேண பரிணமிக்கக்கடவதாய் நித்யமாய் ஈஶ்வரனுக்கு க்ரீடாபரிகரமாய் சரீரபூதமா யிருக்கும்.

காலத்தின்பரிணமமாவது: "நிமேஷம் - பதினைந்து கொண்டது காஷ்டை. காஷ்டை - முப்பதுகொண்டது கலை. கலை - முப்பதுகொண்டது முஹூர்த்தம். முஹூர்த்தம் - முப்பதுகொண்டது திவஸம். திவஸம் - முப்பதுகொண்டது பக்ஷத்வயரூபமான மாஸம். மாஸம் - இரண்டுகொண்டது ருது. ருது - மூன்றுகொண்டது அயநம். அயநம்-இரண்டுகொண்டது ஸம்வத்ஸரம். இப்படி மாநுஷஸம்வத்ஸரம் - முந்நூற்றறுபதுகொண்டது ஒருதேவஸம்வத்ஸரம். தேவஸம்வத்ஸரம்-பன்னீராயிரங்கொண்டது சதுர்யுகம். அதில்-க்ருதயுகம் - நாலாயிரம். த்ரேதை - மூவாயிரம். த்வாபரம் - இரண்டாயிரம். கலி- ஆயிரம். க்ருதயுகத்துக்குப் பூர்வஸந்த்யை-நானூறு. அபரஸந்த்யை - நானூறு. த்ரேதைக்குப் பூர்வஸந்த்யை - முந்நூறு. அபரஸந்த்யை - முந்நூறு. த்வாபரத்துக்குப் பூர்வஸந்த்யை - இருநூ

று. அபரஸந்த்யை-இருநூறு. கலிக்குப் பூர்வஸந்த்யை-நூறு. அபர ஸந்த்யை-நூறு. இப்படி எழுபத்தொன்று சென்ற சதுர்யுகம் ஒருமந்வந்தரம். இப்படி பதினாலுமந்வந்தரம் - ஆயிரம் சதுர்யுகம். இது ப்ரஹ்மாவுக்கு ஒருபகல். ராத்ரியும் - இத்தோடே ஸமமாயிருக்கும். இப்படி அஹோராத்ரங்களும், மாஸ ஸம்வத்ஸரங்களுமாகப் பெருக்கி சதாந்தமாகப் பரிகணிதமான ப்ரஹ்ம ஆயுஸ்ஸுக்குப் பரமென்று பேராம்.'' என்பதாம்.

சுத்தஸத்வத்துக்குச் சுற்றும் மேலும் எல்லையின்றிக்கே விரஜைவரையில் கீழெல்லையுண்டாயிருக்கும். மிஸ்ரஸத்வத்துக்குச் சுற்றும் கீழும் எல்லையின்றிக்கே விரஜைவரையில் மேலெல்லையுண்டாயிருக்கும். காலம் எங்குமொக்க வுண்டாயிருக்கும். சுத்தஸத்வமும் மிஸ்ரஸத்வமும் ஈஸ்வரனுக்கும் ஆத்மாக்களுக்கும் போக்ய போகோபகரண போகஸ்தாநங்களாயிருக்கும். போக்யங்களாவன: சப்தாதிவிஷயங்கள். போகோபகரணங்களாவன: சக்ஷுராதிகரணங்கள். போகஸ்தாநங்களாவன: சதுர்த்தசபுவனமும் ஸ்வஸ்வதேஹங்களும்.

𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌪𑍍𑌸𑍁 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌤𑍇 𑌆𑌪𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑌿 𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇𑌜𑍋 𑌵𑌾𑌯𑍌 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌵𑌾𑌯𑍁𑌰𑌾𑌕𑌾𑌶𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌆𑌕𑌾𑌶𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌷𑍁 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌦𑍌 𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌰𑍍𑌮𑌹𑌤𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌮𑌹𑌾𑌨𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌤𑌮𑌃 𑌪𑌰𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿॥ పృథివ్యప్సు ప్రలీయతే ఆపస్తేజసి లీయంతే తేజో వాయౌ లీయతే వాయురాకాశే లీయతే ఆకాశమింద్రియేషు ఇంద్రియాణి తన్మాత్రేషు తన్మాత్రాణి భూతాదౌ లీయంతే భూతాదిర్మహతి లీయతే మహానవ్యక్తే లీయతే అవ్యక్తమక్షరే లీయతే అక్షరం తమసి లీయతే తమః పరే దేవ ఏకీభవతి॥ என்று சுக்லயஜுர்வேத ஸுபாலோபநிஷத்திற் சொன்னபடி ப்ராக்ருதப்ரளயத்தில் பகவத்ஸங்கல்பத்தால் அண்டமழிந்து ஆத்மாக்களோடு பூமி ஜலத்தில் லயித்து, ஜலம் அக்நியில் லயித்து, அக்நி வாயுவில் லயித்து, வாயு ஆகாசத்தில் லயித்து, ஆகாசம் இந்த்ரியங்களில் லயித்து, இந்த்ரியங்கள் தந்மாத்ரைகளில் லயித்து, தந்மாத்ரைகள் அஹங்காரத்தில் லயித்து, அஹங்காரம் மஹத்தில் லயித்து, மஹத்து அவ்யக்தத்தில் லயித்து, அவ்யக்தம் அக்ஷரத்தில் லயித்து, அக்ஷரம் தமஸ்ஸில் லயித்து, தமஸ்ஸு பரமாத்மாவினிடத்தில் லயித்து பர

மாத்மாவுக்குச் சரீரமென்று நினைக்கவுங்கூடாமல் ஜலத்தில்கரைந்த உப்பைப்போலவும் சந்த்ரகாந்தத்திலிருக்கும் ஜலத்தைப்போலவும் ஸூர்யகாந்தத்திலிருக்கும் அக்நியைப்போலவும் பூமியிற்புதைத்த விதையைப்போலவும் பரமாத்மா வொருவனுக்கே தெரியும்படி அதி ஸூக்ஷ்மமாய் நாமரூபங்களையிட்டு விபாபிக்க வொண்ணாதபடி பரமாத்மாவினிடத்தில் லயித்திருக்கும்.

இப்படி பரனிடத்தில் லயித்திருக்கிற அவிபக்ததமஸ்ஸை ஸு - ௨॥ 𑌸𑌹𑍋𑌵𑌾𑌚 𑌨𑌸𑌨𑍍𑌨𑌾𑌸𑌨𑍍𑌨𑌸𑌦𑌸𑌦𑌿𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌮𑌸𑍍𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑌮𑌸𑍋 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌃 𑌭𑍂𑌤𑌾𑌦𑍇𑌰𑌾𑌕𑌾𑌶𑌂 𑌆𑌕𑌾𑌶𑌾𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 𑌵𑌾𑌯𑍋𑌰𑌗𑍍𑌨𑌿𑌃 𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑌾𑌪𑌃 𑌅𑌦𑍍𑌭𑍍𑌯𑌃𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌤𑌦𑌣𑍍𑌡𑌂𑌸𑌮𑌭𑌵𑌤𑍍॥ ஸு-௬॥ (స)హోవాచనసన్నా సన్న సదసదితి తస్మా త్తమస్సఞ్జాయతే తమసో భూతాదిః భూతాదేరాకాశం ఆకాశాద్వాయుః వాయోరగ్నిః అగ్నేరాపః అద్భ్యః పృథివీ తదణ్డంసమభవత్॥ என்று ஸுபாலோபநிஷத்திலும், 𑌤𑌤𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑍂𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋 𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌯𑌨𑍍𑌨𑌿𑌦𑌂 𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌾𑌸𑍀𑌤𑍍𑌤𑌮𑍋𑌨𑍁𑌦𑌃॥ తతస్స్వయంభూర్భగవాన్ అవ్యక్తో వ్యఞ్జయన్నిదం మహాభూతాదివృత్తౌజాః ప్రాదురాసీ త్తమోనుదః॥ என்று மநுஸ்ம்ருதியிலும் சொல்லியிருக்கிறபடி பரமாத்மா, தன்னுடைய ஸங்கல்பத்தால் நாமரூபங்களையிட்டு விபாகிக்கிறதற்கு யோக்யமாம்படி தன்பக்கலில் நின்றும் விபக்தமாக்கிப் பின்பு ஆத்மஸமூஹத்தை கர்ப்பீகரித்துக்கொண் டிருக்கிறதென்று அறிகிறதற்குக் கூடாமலிருக்கும் தமோ அவஸ்தையைக்கெடுத்து, ஆத்மஸமூஹத்தை கர்ப்பீகரித்துக்கொண் டிருக்கிறதென்று தோன்றும்படியான அக்ஷராவஸ்தையை யடைவித்து, ஸத்வரஜஸ்தமோகுணங்கள் ஸமமாயிருக்கும் அவ்யக்தாவஸ்தையைப் போக்கி, குணங்கள் வைஷம்யத்தை யடையும்படியான வ்யக்தாவஸ்தையை யுண்டாக்கி, அதில் ஸத்வகுணோத்ரேகத்தின்போது ஸாத்விக மஹத்தையும், ரஜோ குணோத்ரேகத்தின் போது ராஜஸமஹத்தையும், தமோகுணோத்ரேகத்தின்போது தாமஸமஹத்தையும் உண்டாக்கி, த்வக்கில்லாத பீஜதுக்கு அங்குரசக்தியில்லாமையால் த்வச்கைப்போலிருக்கும் ப்ரக்ருதியினால் ஆவரிக்கப்பட்ட ஸாத்விகமஹத்தில் நின்றும் வைகாரிகமென்கிற ஸாத்விக அஹங்காரத்தையும், ராஜஸ மஹத்திலிருந்து தைஜஸமென்கிற ராஜஸ அஹங்காரத்தையும், தாமஸ

மஹத்திலிருந்து, பூதாதியென்கிற தாமஸஅஹங்காரத்தையும் உண்டாக்கி, அவற்றுள் பீஜத்தினுடைய அங்குரத்துக்கு ஜலத்தைப்போலவும், அக்கியினுடைய ஜ்வலநத்துக்கு வாயுவைப்போலவும் ஸாதாரணஸஹகாரியாயிருக்கிற மஹதாவ்ருதையான தைஜஸமென்னும் பேராயுடைய ராஜஸாஹங்காரத்தைக்கொண்டு பூதஹேதுவான தாமஸாஹங்காரத்தையும் இந்த்ரியஹேதுவான ஸாத்விகாஹங்காரத்தையும் ப்ரோரித்து, அநந்தரம் மஹதாவ்ருதையாய் பூதாதியென்னும் பேராயுடைய தாமஸாஹங்காரத்தினின்றும் ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்மாவஸ்தையான சப்த தந்மாத்ரையைப் பிறப்பிப்பன். பூதாத்யாவ்ருதமான சப்த தந்மாத்ரையில் நின்றும் இதினுடைய ஸ்தூலாவஸ்தையான ஆகாசத்தையும் வாயுவினுடைய ஸூக்ஷ்மாவஸ்தையான ஸ்பர்ச தந்மாத்ரையையும் பிறப்பிப்பன். சப்த தந்மாத்ராவ்ருதையாய் ஆகாசத்தை ஸஹாயமாகவுடைய ஸ்பர்ச தந்மாத்ரையில் நின்றும் இதினுடைய ஸ்தூலாவஸ்தையான வாயுவையும், தேயுவினுடைய ஸூக்ஷ்மாவஸ்தையான ரூபதந்மாத்ரையையும், இப்படியே பூர்வதந்மாத்ரம் - ஆவரணமாயும், பூதம் ஸஹாயமாயுங்கொண்டு ரூபதந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்தூலாவஸ்தையான தேயுவையும், அப்புவினுடைய ஸூக்ஷ்மாவஸ்தையான ரஸதந்மாத்ரையையும் பிறப்பிப்பன். ரஸதந்மாத்ரையில் நின்றும், இதினுடைய ஸ்தூலாவஸ்தையான அப்புவையும், ப்ருதிவியினுடைய ஸூக்ஷ்மாவஸ்தையான கந்த தந்மாத்ரையையும் பிறப்பிப்பன். கந்ததந்மாத்ரையில் நின்றும் இதினுடைய ஸ்தூலாவஸ்தையான ப்ருதிவியைப் பிறப்பிப்பன்.

இப்படி பிறப்பித்தபின்பு மஹதாவ்ருதையாய் வைகாரிகமென்னும் பெயரையுடையஸாத்வீகாஹங்காரத்தில் நின்றும் ப்ரதிவிஷயநியமத்துக்காக, சப்ததந்மாத்ரையை ஸஹாயமாகக்கொண்டு சப்தத்தை க்ரஹிக்கும்படியான ச்ரோத்ரேந்த்ரியத்தையும், ஸ்பர்சதந்மாத்ரையை ஸஹாயமாகக்கொண்டு சீதோஷ்ணாதி ஸ்பர்சங்களை க்ரஹிக்கும்படியான த்வகிந்த்ரியத்தையும், ரூபதந்மாத்ரையை ஸஹாயமாகக்கொண்டு ரூபத்தை க்ரஹிக்கும்படியான சக்ஷுரிந்த்ரியத்தையும், ரஸதந்மாத்ரையை ஸஹாயமாகக்கொண்டு மதுராதிஷட்ரஸங்களை க்ரஹிக்கும்படியாக ஜிஹ்வேந்த்ரியத்தையும், கந்த தந்மாத்ரையை ஸஹாயமாகக்கொண்டு ஸுகந்தாதிகளை க்ரஹிக்கும்படியான க்ராணேந்த்ரியத்தையும், உண்டாக்கி ச்ரோத்ரேந்த்ரியத்தை ஸஹாயமாகக்கொண்டு ச்ரோத்ரேந்த்ரிய க்ராஹ்யமான சப்தத்தைச்சொ

ல்லும்படியான வாக்கையும், த்வகிந்த்ரியத்தை ஸஹாயமாகக்கொண்டு த்வகிந்த்ரிய க்ராஹ்யமான ஸ்பர்சத்தால் சில்பவேலை முதலியவைகளைச் செய்யும்படியான பாணியையும், சக்ஷுரிந்த்ரியத்தை ஸஹாயமாகக்கொண்டு, சக்ஷுரிந்த்ரிய க்ராஹ்யமான ரூபத்தில் ப்ரவர்த்திக்கும்படியான பாதத்தையும், ஜிஹ்வேந்த்ரியத்தை ஸஹாயமாகக்கொண்டு மதுர ரஸாச்ரயமான ஜலத்தை விடும்படியான உபஸ்தத்தையும், க்ராணேந்த்ரியத்தை ஸஹாயமாகக்கொண்டு கந்தாச்ரயமான அந்நாதிகளின் ஸ்தூலாம்சமான மலாதிகளை விடும்படியான பாயுவையும், ஸஹாயநிரபேக்ஷமாக ஜ்ஞாநேந்த்ரிய கர்மேந்த்ரியங்களுக்கு ஸஹகாரியானமநஸ்ஸையும் உண்டாக்கி, சாந்தத்வ கோரத்வ மூடத்வங்களாலே,நாநாசக்திகளோடுங் கூடினதாய், ப்ரத்யேக ப்ரத்யேகங்களாயிருக்கிற மஹதஹங்கார ஆகாச வாய் வக்நி ஜலம் பூமி இவ்வேழையும் ஒன்ருேடொன்று சேர்க்கவேண்டிய பாகப்ரகாரம் சேர்த்தாலல்லது, அண்டபிண்டரூப கார்யவர்க்கங்க ளமையாவாகையால், மண்ணையும்மணலையும்நீரையும்சேர்த்து ஒரு த்ரவ்யமாக்கிச் சுவரிடுவாரைப்போலே இவற்றை யெல்லாம் சேர்த்து ஸப்தீகரணஞ்செய்து நேராகத்தானே அண்டங்களையுண்டாக்கி, அண்டங்களுக்கு வேண்டுங் கர்மவச்யசேதநர், சரீரங்களில் உண்டாய்க்கிடக்கும்படி ப்ரஹ்மாக்களை ஸ்ருஷ்டித்து, அந்த ப்ரஹ்மாக்களுக்கு அந்தர்யாமியாயிருந்து, அவர்கள் த்வாரா பதினுன்கு லோக விபாகங்களையும் லோகாந்தர்வர்த்திகளான தேவதிர்யங் மநுஷ்ய ஸ்தாவரங்களையும் அப்பரமாத்மா ஸ்ருஷ்டித்தருளுகிறுன்.

𑌅𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌯𑍁𑌤𑌾𑌨𑌿 𑌚 ।
𑌈𑌦𑍃𑌶𑌾𑌨𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍋𑌟𑌿𑌕𑍋𑌟𑌿𑌶𑌤𑌾𑌨𑌿 𑌚 ॥
అండానాంతుసహస్రాణాం సహస్రాణ్యయుతానిచ ఈదృశానాంతథాతత్ర
కోటికోటిశతానిచ॥ என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற் சொல்லியிருக்கிறபடி அண்டங்கள்தான், அநேகங்களாய்ப் பதினுலுலோகங்களோடே கூடிக்கொண்டு, ஒன்றுக்கொன்று பதிற்றுமடங்கான ஜலம், அக்நி, வாயு, ஆகாசம்,அஹங்காரம்,மஹத்,அவ்யக்தங்களாகிற ஏழாவரணங்களாலே சூழப்பட்டு, ஸர்வேச்வரனுக்கு க்ரீடாகந்துகஸ்தாநீயங்களாய் நீர்க்குமிழிகளைப்போலே ஏககாலத்திலே ஸ்ருஷ்டங்களாயிருக்கும். அண்டத்துக்குள் ளடங்கிய பூகோள பகோள விஷயங்களை, தத்வத்ரய வ்யாக்யாநத்தோடு சேர்த்து அச்சிட்டிருக்கும் பூபகோள விஷயத்தில் பரக்கக்காணலாம்.

தந்மாத்ரைகளாவன: சாந்தத்வ கோரத்வ மூடத்வங்களாகிற விசேஷங்களை யுடைத்தல்லாத சப்தாதிமாத்ரத்தை குணமாக வுடைய ஆகாசாதி பூதங்களின் ஸூக்ஷ்மாவஸ்தைகள்.

பூதங்களாவன: சாந்தத்வ கோரத்வ மூடத்வங்களாகிய விசேஷங்களை யுடையவைகளாய், சப்தாதிகளை குணமாகவுடைய ஆகாசாதிகள். அவைகளில் சாந்தத்வமாவது: அநுகூலமாகத் தோற்றுதல். கோரத்வமாவது: ப்ரதிகூலமாகத் தோற்றுதல். மூடத்வமாவது: உதாஸீநமாகத் தோற்றுதல். அவற்றுள், ஸ்வபாவமே சாந்தங்களாயிருக்கும் பூமியும் ஜலமும். கோரங்களாயிருக்கும் தேஜஸ்ஸும் வாயுவும். மூடமாயிருக்கும் ஆகாசம். சேர்க்கையாலே எல்லாபூதங்களும் சாந்தத்வ கோரத்வ மூடத்வங்களை யுடையனவாயிருக்கும்.

பூதங்களில் ஆகாசம்-ஸகலபதார்த்தங்களுக்கும் இருத்தல், நடத்தல், சயநித்தல், முதலியவைகட்கு இடங்கொடுத்துக் கொண்டு 𑌅𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌸𑍍𑌯 𑌵𑌿𑌯𑌤𑌾 𑌲𑌾𑌘𑌵𑌂 𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚 𑌶𑌬𑍍𑌦𑌶𑍍𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌬𑌲𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌸𑍁𑌷𑌿𑌰𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌤𑌾 ॥ అస్యదేహస్య వియతో లాఘవం సౌక్ష్మ్యమేవచ శబ్దశ్శ్రోత్రం బలం బ్రహ్మన్ సుషిరత్వం వివిక్తతా ఎன்கிறபடி அநேகவிநியோகங்களுக்கு உபயோகமாயிருக்கும்.

வாயு - வஹித்தல், வ்யூஹநம், சேஷ்டை, முதலியவைகளைச் செய்துகொண்டு 𑌵𑌾𑌯𑍋𑌸𑍍𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌂 𑌕𑌾𑌰𑍍𑌕𑌶𑍍𑌯𑌂 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑍇𑌵 𑌚 𑌵𑍍𑌯𑍂𑌹𑌨𑌂 𑌵𑌹𑌨𑌂 𑌦𑍇𑌹 𑌸𑍍𑌵𑍀𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌸𑍍𑌤𑌮𑌃 ॥ వాయోస్స్పర్శేంద్రియం చేష్టాం కార్కశ్యం స్పర్శమేవచ వ్యూహనం వహనం దేహ స్వీకరోతి సత్తమ। என்கிறபடி அநேக விநியோகங்களுக்கு உபயோகமாயிருக்கும்.

தேஜஸ்ஸு - பாகம்பண்ணுகைக் குபயோகமாய் உஷ்ண ப்ரகாசாதிகளை யுடைத்தாய் 𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑍌𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌂 𑌰𑍂𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌮𑌰𑍍𑌷𑌣𑌂 𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑌶𑍌𑌰𑍍𑌯𑌤𑍈𑌕𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑌚𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌾𑌂 𑌆𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸𑌹𑌸𑌾 𑌦𑍇𑌹 𑌸𑌾𑌹𑌸𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑌰𑍍𑌷𑌭𑌃 ॥ అగ్నేరౌక్ష్యం ప్రకాశత్వం రూపేంద్రియమమర్షణం సంతాపశ్శౌర్యతైక్ష్ణ్యాని వర్ణం పచనశక్తితాం ఆధత్తే సహసా దేహ సాహసం చద్విజర్షభః॥ என்பதின்படி அநேக விநியோகங்களுக்கு உபயோகமாயிருக்கும்.

ஜலம் - நனைக்கை திரட்டுகைக் குபயோகமாய், சைத்யமார்த்தவாதிகளையுடையதாய், அப்யவஹார்யத்வம் ஸமாதத்தே ஸ்நிக்தத்வம் ரஸநேந்த்ரியம் ப்ரஸாதம் மார்தவம் பிண்டீகரணம் க்லேதநம் ச யத்॥ అభ్యవహార్యత్వం సమాదత్తే స్నిగ్ధత్వం రసనేంద్రియం ప్రసాదం మార్దవం పిండీకరణం క్లేదనం చ యత్॥ என்பதின்படி அநேகவிநியோகங்களுக் குபயோகமாயிருக்கும்.

பூமி - தரித்துக்கொண் டிருக்கையோடு கந்தகுணத்வ மூர்த்திமத்வ ஸஹிஷ்ணுத்வ குருத்வங்களையுடையதாய், பூமேர்கந்தகுணம் க்ராணம் கரிமாணம் ச தாரணம் மூர்த்திமத்த்வம் ஸஹிஷ்ணுத்வம் ஸ்வீகரோதி யதாததம்॥ భూమేర్గంధగుణం ఘ్రాణం గరిమాణం చ ధారణం మూర్తిమత్త్వం సహిష్ణుత్వం స్వీకరోతి యథాతథం॥ என்பதின்படி அநேகவிநியோகங்களுக்கு உபயோகமாயிருக்கும்.

ஆகாசகுணம் சப்தம், வாயுகுணம் ஸ்பர்சம், அக்நிகுணம் ரூபம், ஜலகுணம் ரஸம், ப்ருதிவிகுணம் கந்தம். பூர்வபூர்வ தந்மாத்ரைகளோடே கூடிக்கொண்டு உத்தரோத்தர தந்மாத்ரைகள், ஸ்வவிசேஷங்களான பூதங்களைப்பிறப்பிக்கையாலே, பூதங்களில் ஆகாசத்துக்கு சப்தமும், வாயுவுக்கு சப்த ஸ்பர்சங்களும், அக்நிக்கு சப்த ஸ்பர்ச ரூபங்களும், ஜலத்துக்கு சப்தஸ்பர்ச ரூபரஸங்களும், பூமிக்கு சப்தஸ்பர்ச ரூபரஸகந்தங்களும் உண்டாயிருக்கின்றன.

குணவிநிமயம் பஞ்சீகரணத்தாலே. அதாவது: ஏகபூதத்திலே பூதாந்தரகுணங்களுங் காணலாம்படியான பூதங்களினுடைய கலப்பு. அதாவது: ஆகாசாதி பூதங்களைந்தையும் தனித்தனியே யிரண்டுகூறுக்கி, அவற்றிலே யொருகூறை நாலுகூறுக்கி, அந்தக்கூறுகளை பூதாந்தரங்களிலேகூட்டி ஸர்வபூதங்களிலும் ஸர்வமு முண்டாம்படி பண்ணுகை. இப்படி பஞ்சீகரணமானாலும், பாதிபாகம் ப்ரதாநமாயிருக்கையாலே ஆகாசாதி பூதபேத வ்யவஹாரங்களுக்குக் குறையில்லை. ஆகாசம் கறுத்துத்தோற்றுகிறதும் பஞ்சீகரணத்தாலே. யத் க்ருஷ்ணம் தத் ப்ருதிவ்யா:॥ యత్కృష్ణం తత్పృథివ్యాః॥ என்று ப்ருதிவிக்குக் கறுத்தநிறமுண்டென்று சொல்லியிருக்கிறது. வேதத்தில் த்ரிவ்ருத்கரணத்தையும், புராணங்களில் பஞ்சீகரணத்தையும், ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் ஸப்தீகரணத்தையுஞ் சொல்லியிருக்கிறது.

தேஜஸ்ஸு: பௌமம், திவ்யம், ஔதர்யம், ஆகரஜம் என்கிற பேதங்களாலே அநேகவிதங்களாயிருக்கும். ப்ருதிவியை ப்ரகாசஸா

தநமாய்க்கொண்டு ப்ரகாசிக்கிறது பௌமம்; அதாவது தீபாதி. ஜல த்தை ப்ரகாச ஸாதநமாய்க்கொண்டு ப்ரகாசிக்கிறது திவ்யம்; அதாவது ஆதித்யாதி. அந்நபாநாதிகளை ப்ரகாச ஸாதநமாய்க்கொண்டு ப்ரகாசிக்கிறது ஔதர்யம்; அதாவது ஜாடராக்நி. ப்ரகாச ஸாதந மில்லாமலே ப்ரகாசிக்கிறது ஆகரஜம்; அதாவது ஸுவர்ணாதிகள்.

இந்த தேஜஸ்ஸுக்கு நிறம் - சிவப்பு; ஸ்பர்சம் - ஔஷ்ண்யம்; ஜலத்துக்குநிறம்-வெளுப்பு; ஸ்பர்சம்-சைத்யம்; ரஸம் - மாதுர்யம்; பூமிக்குநிறமும் ரஸமும் பஹுவிதம். பூமிக்கும் வாயுவுக்கும் ஸ்பர் சம்-அநுஷ்ணசீதம்.

ஜ்ஞாநேந்த்ரியங்களிந்தில் ஸ்ரோத்ரேந்த்ரியத்துக்கு சப்தக்ர ஹணமும், த்வகிந்த்ரியத்துக்கு ஸ்பர்ஸ க்ரஹணமும், சக்ஷுரிந்த்ரிய த்துக்கு ரூபக்ரஹணமும், ஜிஹ்வேந்த்ரியத்துக்கு ரஸக்ரஹணமும், க்ராணேந்த்ரியத்துக்கு கந்தக்ரஹணமும் தொழில்.

கர்மேந்த்ரியங்களிந்தில் வாக்குக்கு வார்த்தை சொல்லுதலும், பாணிக்கு சில்பமும், பாதத்துக்கு கதியும், உபஸ்தத்துக்கு ஜலவிஸர் ஜநமும், பாயுவுக்கு மலவிஸர்ஜனமும் தொழில்.

ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஸ்வஸ்வ விஷயங்களை க்ரஹிக்கும்போ தும், கர்மேந்த்ரியங்கள் ஸ்வஸ்வ கர்மங்களைச் செய்கிறபோதும் மந ஸ்ஸின் ஸஹகாரம் வேண்டுகையாலே மநஸ்ஸு இவை யித்தனைக் கும் பொதுவாயிருக்கும்.

அக்நிர்வாக்பூத்வா முகம் ப்ராவிஶத் வாயுஃப்ரா
ணோ பூத்வா நாஸிகே ப்ராவிஶத் ஆதித்யஶ்சக்ஷுர்பூ
த்வா அக்ஷிணீ ப்ராவிஶத் திஶஶ்ஶ்ரோத்ரம் பூத்வா க
ர்ணௌ ப்ராவிஶத் ஓஷதிவனஸ்பதயோ லோமாநி பூத்வா
த்வசம் ப்ராவிஶத் சந்த்ரமா மனோ பூத்வா ஹ்ருதயம் ப்ரா
விஶத் ம்ருத்யுரபானோ பூத்வா நாபிம் ப்ராவிஶத் ஆ
போ ரேதோ பூத்வா ஶிஶ்நம் ப்ராவிஶத் ॥ అగ్నిర్వాగ్భూత్వా
ముఖంప్రావిశత్ వాయుర్ప్రాణోభూత్వానాసికే ప్రావిశత్ ఆదిత్యశ్చక్షుర్భూ
త్వా అక్షిణీప్రావిశత్ దిశశ్శ్రోత్రంభూత్వా కర్ణౌప్రావిశత్ ఓషధీవనస్ప
తయోలోమానిభూత్వాత్వచంప్రావిశత్ చంద్రమామనోభూత్వాహృదయం
ప్రావిశత్ మృత్యురపానోభూత్వానాభింప్రావిశత్ ఆపోరేతోభూత్వాశి

శ్రోత్రం ప్రావిశత్ என்று பரமாத்ம ஸங்கல்பத்தாலே அக்னி வாகிந்த்ரியத்தை அதிஷ்டித்திருக்கிறதாகவும், வாயு க்ராணேந்த்ரியத்தை அதிஷ்டித்திருக்கிறதாகவும், ஸூர்யன் சக்ஷுஸ்ஸை அதிஷ்டித்திருக்கிறதாகவும் திக்தேவதை ஶ்ரோத்ரேந்த்ரியத்தை யதிஷ்டித்திருக்கிறதாகவும், ஓஷதிவநஸ்பதிதேவதை ரோமங்களை அதிஷ்டித்திருக்கிறதாகவும், சந்த்ரன் மநஸ்ஸை அதிஷ்டித்திருக்கிறதாகவும், ம்ருத்யு வாயுவை அதிஷ்டித்திருக்கிறதாகவும், வருணன் உபஸ்தத்தை அதிஷ்டித்திருக்கிறதாகவும் ஶ்ருதியில் சொல்லி யிருக்கையாலே தேவாதிஷ்டிதங்களாய் தேவசப்த வாச்யங்களான இந்த்ரியங்கள் பதினொன்றும் ராஜஸாஹங்கார கார்யமென்று சிலரும், க்ராணாதிகளான ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும் பூதங்களின் கார்யமாகச் சிலரும் சொல்லுகிறார்கள்; அத 𑌏𑌕𑌾𑌦𑌶𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ఏకాదశం మనశ్చాత్ర దేవా వైకారికాస్స్మృతాః என்று ஸாத்வீகாஹங்கார கார்யமாகச் சொல்லுகிற புராணாதிகளுக்குவிரோதிக்கும். 𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌨𑌃 𑌆𑌪𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑍀 𑌵𑌾𑌕𑍍 అన్నమయం హి సౌమ్య మనః ఆపోమయః ప్రాణస్తేజోమయీ వాక్ என்று சாந்தோக்யோபநிஷத்திலும், 𑌶𑌬𑍍𑌦𑌶𑍍𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾𑌖𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌕𑌾𑌶𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 𑌵𑌾𑌯𑍋𑌸𑍍𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌂 𑌤𑌥𑌾 𑌚𑍇𑌷𑍍𑌟𑌾 𑌤𑍍𑌵𑌕𑍍𑌚𑍈𑌵 𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 𑌰𑍂𑌪𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌤𑌥𑌾 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌂 𑌤𑍈𑌜 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌰𑌸𑌕𑍍𑌲𑍇𑌦𑌶𑍍𑌚 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌚 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌜𑌲𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 𑌘𑍍𑌰𑌾𑌣𑌂 𑌘𑍍𑌰𑍇𑌯𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌚 𑌤𑍇 𑌤𑍁 𑌭𑍂𑌮𑌿𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃॥ శబ్దశ్శ్రోత్రం తథాఖాని త్రయమాకాశసంభవం వాయోస్స్పర్శం తథాచేష్టా త్వక్చైవ త్రితయం స్మృతం రూపం చక్షుస్తథావ్యక్తి స్త్రితయం తైజ ఉచ్యతే రసక్లేదశ్చ జిహ్వా చ త్రయో జలగుణాస్స్మృతాః ఘ్రాణం ఘ్రేయం శరీరం చ తేతు భూమిగుణాస్స్మృతాః॥ என்று மோக்ஷதர்மத்திலும் சொன்ன பௌதிகத்வம், பூதங்களாலுண்டாகிற போஷகத்வத்தைச்சொல்லுகிறதேயன்றி காரணத்வத்தைச் சொன்னதன்று.

இந்த்ரியங்கள் பதினொன்றென்கிறது, வ்யஷ்டிவிஷயமன்று; ஸமஷ்டிவிஷயம். 𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌵𑌵𑌯𑌵𑌾𑌨𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌨𑍍 𑌷𑌣𑍍𑌣𑌾𑌮𑌪𑍍𑌯𑌮𑌿𑌤𑍌𑌜𑌸𑌾𑌂 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍁 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍇॥ ఏతేషాం త్వవయవాన్సూక్ష్మాన్ షణ్ణామప్యమితౌజసాం సన్నివే

ஆத்மமாத்ராஸு ஸர்வபூதாநி நிர்மமே॥ ఆత్మమాత్రాసు సర్వభూతాని నిర్మమే॥ என்று இந்த்ரியங்கள் அணுக்களாகையாலே, ஸூக்ஷ்மங்களான அந்த இந்த்ரியங்களை பூதஸூக்ஷ்மங்களான தந்மாத்ராதிகளோடே சேர்த்திருக்கிற ஆத்மாக்களிலே ப்ரவேசிப்பித்து ஸர்வபூதங்களையும், ஈஶ்வரன் ஸ்ருஷ்டித்தானென்று மநுவசநமுண்டாகையாலே. இப்ப்ரமாணத்தில், ஸூக்ஷ்மாஶ்ச॥ సూక్ష్మాశ్చ॥ என்கையாலே, அணவஶ்சேந்த்ரிய:॥ అణవశ్చేంద్రియః॥ என்கிற ப்ரஹ்மஸூத்ர ப்ரகாரம் இந்த்ரியங்களணுக்களென்றும், அவயவாஶ்ச॥ అవయవాః॥ என்கையாலே இந்த்ரியங்களநேகங்களென்றும், ஆத்மாக்களிலே கூட்டினானென்கையாலே, ஸ்ருஷ்டியாதியிலே கொடுத்த இந்த்ரியங்களே ஸம்ஹாரபர்யந்தமிருக்குமென்றும், ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர: க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாஶயாத்॥ శరీరం యదవాప్నోతి యచ్చాప్యుత్క్రామతీశ్వరః గృహీత్వైతాని సంయాతి వాయుర్గంధానివాశయాత్॥ என்கிற பகவத்கீதாவசநத்தின்படி ஆத்மா சரீரத்தைவிட்டு வேறொருசரீரத்திலே ப்ரவேசிக்கும்போதும் லோகாந்தரகமநாதிகளிலும் இந்த்ரியங்களை க்ரஹித்துக்கொண்டு போகிறதென்று கொள்ளவேண்டியிருக்கிறது. ஷண்ணாம் షణ్ణాం என்றும், மநஷ்ஷஷ்டாநி మనష్షష్ఠాని என்றும் ஆறென்றுசொன்ன கணக்கில் நிர்ப்பந்தமில்லை; மற்ற இந்த்ரியங்களுங் கூடிப்போகையாலே.

ப்ரக்ருதி ஸ்வரூபாநுபந்திகளான குணங்களாவன: ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்கள். தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶகமநாமயம் ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாநஸங்கேந சாநக॥ తత్ర సత్త్వం నిర్మలత్వాత్ ప్రకాశకమనామయం సుఖసంగేన బధ్నాతి జ్ఞానసంగేన చానఘ॥ என்கிற பகவத்கீதாவசநத்தின்படி ஸத்வகுணம், நிர்மலமாகையாலே ஜ்ஞாநஸுகங்களை மறைக்காமல் அவற்றைப் ப்ரகாசிப்பிக்குமதாய், ஜ்ஞாநஸுகங்களைப் பெறுவதற்கு லௌகிகவைதிகங்களில் ப்ரவர்த்திக்கும்படி ப்ரேமத்தையுண்டுபண்ணி, ஸுகஸாதநங்களைச் செய்வித்து நல்லஜந்மங்களிலே பிறக்கும்படி பந்திக்கும்.

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம் தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம்॥ రజో రాగాత్మకం

విద్ధి తృష్ణాసంగసముద్భవం తన్నిబధ్నాతి కౌంతేయ కర్మసంగేన దేహినాం॥ என்கிற பகவத்கீதாவசநத்தின்படி ரஜோகுணம், ஸ்த்ரீபுருஷர்களுக்கு அந்யோந்யமுண்டாகும் ஆசையையும், சப்தாதிஸர்வவிஷயங்களில் ப்ராவண்யத்தையும், புத்ரமித்ராதிகளுடைய ஸம்ஶ்லேஷத்தில் ப்ரீதியையும், அவற்றிற்கு ஸாதநமான கார்யங்களைச்செய்யும்படியான இச்சையையும் உண்டாக்கிக் கார்யங்களைச்செய்வித்து அவைகளை யடையும்படியான ஜந்மங்களை யுண்டாக்கி பந்திக்கும்.

𑌤𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍋𑌹𑌨𑌂𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌿 𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿𑌭𑌾𑌰𑌤॥ తమస్త్వజ్ఞానజం విద్ధి మోహనం సర్వదేహినాం ప్రమాదాలస్యనిద్రాభి స్తన్నిబధ్నాతి భారత॥ என்கிற பகவத்கீதாவசநத்தின்படி ஒருவஸ்துவை வேறுவஸ்துவாக அறியும்படியான அஜ்ஞாநத்தையும், செய்கிற தொழிலில் ஜாக்ரதையில்லாமையையும், ஒருகார்யத்தையும் ஆரம்பியாமலிருக்கத்தக்க சோம்பலையும், நித்ரையையும் உண்டாக்கி பந்திக்கும்.

மஹத்தத்வம்: ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும் த்ரிவிதமாய் 𑌮𑌹𑌾𑌨𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃॥ మహాన్బుద్ధిలక్షణః॥ என்கிறபடி புத்திலக்ஷணமாகையாலே, அத்யவஸாய ஜநகமாயிருக்கும். அவற்றில்ஸாத்விகபுத்தியாவது: 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌞𑍍𑌚𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌞𑍍𑌚𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌭𑌯𑌾𑌭𑌯𑍇 𑌬𑌨𑍍𑌧𑌂𑌮𑍋𑌕𑍍𑌷𑌂𑌚𑌯𑌾𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑌾𑌪𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀॥ ప్రవృత్తించ నివృత్తించ కార్యాకార్యే భయాభయే బంధమోక్షంచ యా వేత్తి బుద్ధిస్సా పార్థసాత్వికీ॥ என்று ஸம்பத்விர்த்திக்கு ஸாதநமான ப்ரவர்த்தி தர்மத்தையும் மோக்ஷஸாதநமான நிவர்த்தி தர்மத்தையும் இவ்விரண்டிலொன்றைப்பற்றி யநுஷ்டிக்குமவர்களான ஸகலவர்ணத்தாரும் தேசகாலாவஸ்தைகளுக்குத் தக்கபடி இதைச்செய்யத்தகும்; இதைச்செய்யத்தகாது; என்பதையும், சாஸத்ரங்களை யதிக்ரமித்து வர்த்திப்பதுபயஹேதுவென்பதையும், சாஸ்த்ரங்களில் சொன்னபடி வர்த்திப்பது அபயஹேதுவென்பதையும், ஸம்ஸாரஹேது இன்னதென்பதையும் மோக்ஷஹேது இன்னதென்பதையும் உள்ளபடி அறிவிப்பதென்றும்,

ராஜஸபுத்தியாவது: 𑌯𑌯𑌾𑌧𑌰𑍍𑌮𑌮𑌧𑌰𑍍𑌮𑌂𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂𑌚𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍇𑌵𑌚 𑌅𑌯𑌥𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑌾𑌪𑌾𑌰𑍍𑌥𑌰𑌾𑌜𑌸𑍀॥

యయా ధర్మమధర్మంచ కార్యంచాకార్యమేవచ అయథావత్ప్రజానాతి బుద్ధిస్సాపార్థరాజసీ॥ என்று முன்சொன்ன ப்ரவர்த்தி நிவர்த்தி தர்மங்களையும் கார்யாகார்யங்களையும் பந்த மோக்ஷங்களையும் உள்ளபடியறிந்து அறுதியிடமாட்டாமல், அந்யதாவாக அதாவது விசேஷதர்மத்தை ஸாமாந்யமாகவும் ஸாமாந்யதர்மத்தை விசேஷமாகவும் அறுதியிடும்படியானதென்றும்,

தாமஸபுத்தியாவது: சுயஉ-ஂயஉ-ஶிதியா உநூ்தெதஉ ஷாவ்ருதா ஷவ-ூாய-ூாநு விவரீதாஂஶ்ரு வ-ஂஜிஷாவா ய-ூதாஉஷீ॥ అధర్మం ధర్మమితి యా మన్యతే తమసావృతా సర్వార్థాన్ విపరీతాంశ్చ బుద్ధిస్సాపార్థతామసీ॥ என்று தர்மத்தை அதர்மமாகவும், அதர்மத்தை தர்மமாகவும், ஸத்தை அஸத்தாகவும், அஸத்தை ஸத்தாகவும், பரதத்வத்தை அபரதத்வமாகவும், அபரதத்வத்தை பரதத்வமாகவும்; இப்படி ஸர்வார்த்தங்களையும் விபரீதமாக நிச்சயிப்பதென்றும் பகவத்கீதையில் பகவான் அருளிச்செய்தார்.

அஹங்காரம், தேஹத்தில் ஆத்மபுத்தியையும், மமகாரம், தேஹாநுபந்திகளான க்ருஹக்ஷேத்ர புத்ரமித்ர களத்ராதிகளில் மமதாபுத்தியையும் உண்டாகுமதாயிருக்கும்.

ஸர்வவஸ்துக்களும் ப்ரஹ்மகார்யமுமாய் ப்ரஹ்ம சரீரமுமாய் ப்ரஹ்மாத்மகமுமா யிருக்கையாலே தத்கார்யமுமன்றிக்கே தச்சரீரமுமன்றிக்கே ததாத்மகமுமன்றிக்கே யிருக்கிற வஸ்துவில்லை.

வேதாந்தத்திலே பஞ்சாக்நி வித்தையில் ஓதிவைத்த ப்ரகாரம் ஆத்மா, ஆர்ஜித்த புண்யபாப ரூபகர்மங்களில் பாபகர்மத்தால் யாதநாசரீரத்தைப் பரிக்ரஹித்து அதின்மூலமாக, நரகாநுபவம்பண்ணி அச்சரீரத்தை யங்கேபோகவிட்டு, அநந்தரம் புண்யகர்மத்தால்புண்யசரீரத்தைப் பரிக்ரஹித்து அதின்மூலமாக ஸ்வர்க்காநுபவம் பண்ணி அங்கேயும் அச்சரீரத்தைப் போகவிட்டு, ஸூக்ஷ்மசரீரத்தோடே நிராலம்பநமான ஆகாசத்திலேவர்த்திக்க, ஸூர்யன் தன்கிரணங்களாலே பனியை க்ரஹித்து, அத்தோடு ஆத்மாவைச்சேர்த்து மேகத்திலேபுகவிட, மேகம் வர்ஷிக்குமளவும் அங்கேகிடந்து, வர்ஷதாரைகளோடே பூமியிலேவிழ, விழுந்தஜலம் பயிருக்கு தாரகமாய்ப் புகுமளவிலே தத்வாரா பயிரிலேபுகுந்து அந்தப்பயிர் பக்வமாய் தாந்யத்தையுண்டாக்க, அத்தாந்யம் அந்நரூபமாய்ப் பரிணமிக்கு மளவும் அதிற்கிடந்து, பின்பு அந்நத்வாரா புருஷசரீரத்திலேபுகுந்து சுக்

லமாய்ப் பரிணமிக்குமளவு மிருந்து ஸ்த்ரீபுருஷர்களுடைய ஸம் போககாலத்தில் புருஷசுக்லத்தோடு ஸ்த்ரீயுதர மூலாதாரத்தின்கீழி ழிந்து கர்ப்பஸ்தாநத்தில் புகுகிறது.

ஸாமவேதோபநிஷத்தாகிய சாந்தோக்யத்தில், பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி॥ పంచమ్యామాహుతావాపః పురుషవచసో భవన్తి॥ என்கிறபடி கர்ப்பமாய் ஶுக்லஶோணிதஸம்யோகாதாவர்த்ததே கர்ப்ப:॥ శుక్లశోణితసంయోగా దావర్తతే గర్భః॥ என்று யஜுர்வேத கர்ப்போபநிஷத்தில் சொன்ன படி சுக்லசோணிதங்க ளிரண்டுங்கூடி ஸம்பூர்ணித்து, முதல்நாளிர வில் நீர்த்துளிபோலிருந்து, எழாநாளில் குமிழியாய், பதினைந்தாநா ளில் பிண்டமாய், முதல்மாஸத்தில் கடினமாய் இறுகிவளர்ந்து, இர ண்டாம்மாஸத்தில் தலையும், மூன்றும்மாஸத்தில் காலும்கையும், நா லாம்மாஸத்தில் வயிறும் இடையும், ஐந்தாம்மாஸத்தில் ப்ருஷ்டபாக மாகிய பின்னையும், ஆறும்மாஸத்தில் கண் மூக்குச் செவிகளும் உண்டாகும். ஏழாம்மாஸத்தில் ஹ்ருதயத்தில ஜீவன் குடிபுகும். எட் டாம்மாஸத்தில் ஸர்வாவயவங்களும் ஸம்பூர்ணமாம். அப்போது நவ த்வாரங்களுந்திறந்து அதின்சேஷ்டையுண்டாய் மாதாபுஜித்த அந்ந ரஸங்களை நாபீஸூத்ரத்தாலே க்ரஹிக்கும். ஒன்பதாம்மாஸத்தில் குழந்தையாய் பூர்வஜந்ம வ்ருத்தாந்தங்களையுணர்ந்து வ்யஸநப்ப ட்டு கர்ப்போபநிஷத்தில் சொன்னபடி இனி பிறவாமைக்காக தன் ஹ்ருதயத்தில் ப்ரணவப்ரகாசியாய்நின்ற முகுந்தனை த்யாநித்துக் கொண்டு அவனுடைய மூலமந்த்ர ஜபம்பண்ணிக்கொண்டிருக்கும்.

அந்தச்சிசு: ஸாயம்ப்ராதஸ்தாயிகாவர்த்தி: ஸாத்ருதே தத்தாயி கா:வர்த்தநு ஸாயம்ப்ராஹதம் ஸம்ஸ்யோ தோஷம்ஜநயதி ஹி யதே॥ భార్యారక్తాధికా పుత్రీః భర్తుః రేతోధికః పుమాన్ భార్యాభ ర్త్రోస్సమం రేతో షండ ఇత్యభిధీయతే॥ என்கிறபடி ஸம்போககாலத்தில் பிதாவின் ரேதஸ்ஸு மிஞ்சிற்றாகில் புருஷனும்; மாதாவின் ஶோ ணிதம் மிஞ்சிற்றாகில் ஸ்த்ரீயாம். இரண்டும் ஸமமாகில் நபும்ஸக மாம். சஞ்சலத்தோடு உடன்படாப் புணர்ச்சியினாலுண்டான கர்ப் பம், கூன் குறள் சப்பாணி குருடு ஊமை செவிடுகளாம். கர்ப்பஸ்தா நத்தில் சுக்லசோணிதங்கள் அபாநவாயுவால் கூறுப்பட்டால் இரட் டைப்பிள்ளையாம்.

கர்ப்பத்தில் பத்துமாஸங்கள் சென்றவாறே அந்தச்சிசு, 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑍇𑌨 𑌵𑌾𑌤𑍇𑌨 𑌪𑍀𑌡𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌸𑍍𑌥𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 𑌅𑌧𑍋𑌮𑍁𑌖𑌃 𑌸 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌬𑌲𑍈𑌃 𑌸𑍂𑌤𑌿𑌮𑌾𑌰𑍁𑌤𑍈𑌃॥ ప్రాజాపత్యేన వాతేన పీడ్యమానోస్థిబంధనః అధోముఖస్స క్రియతే ప్రబలైస్సూతిమారుతైః॥ என்கிறபடி ப்ராஜாபத்யவாயுவினாலே அதோமுகமாகத் தள்ளப்பட்டு, சிறுதொளையையுடைய அச்சில் கம்பி வலியுண்ணுமாபோலே ஸர்வாவயவங்களும் நெரிந்திட பயத்தோடு யோநித்வாரமாக ப்ராரப்த கர்மங்களோடேவந்து பூமியில் பிறக்கும். 𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍋 𑌬𑌾𑌹𑍍𑌯𑌵𑌾𑌯𑍁𑌨𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌭𑍍𑌰𑌂𑌶𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥ సంస్పృష్టో బాహ్యవాయునా విజ్ఞానంభ్రంశమాప్నోతి॥ என்கிறபடியே ஜநித்தவாறே பாஹ்யவாயுவினால் முன்புள்ள ஜ்ஞாநம்போய் க்ஷுத்பிபாஸைகளாலே நலிவுண்டு, மாதாவானவள் எண்ணெயாலும் பாலாலும் ப்ராணதாரணம் பண்ணக்கிடக்கும். குழந்தையின் சரீரம் இப்படியே நாள்தோறும் பரிணமித்துக்கொண்டிருக்கும்.

"பொங்கைம்புலனும் பொறியைந்துங் கருமேந்திரிய மைம்பூத மிங்கிவ்வுயிரோய் பிரகிருதி மானாங்காரமனங்கள்" என்று தத்வ ப்ரதிபாதக சாஸ்த்ரங்களைவிடச் சிறந்ததாய் தத்வதர்சியான ஆழ்வாரருளிச்செய்ததின்படி சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்கிற விஷயங்களைந்தும்; ஶ்ரோத்ரம், த்வக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வை, ஆக்ராணம் என்கிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும்; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்கிற கர்மேந்த்ரியங்களைந்தும்; மநஸ்ஸு ஒன்றும் ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற பூதங்களைந்தும்; ப்ருதிவி, மஹத்து, அஹங்காரம் என்கிற மூன்றும் ஆகிய *இருபத்துநான்குதத்வங்களில், 𑌅𑌷𑍍𑌟𑍌 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑌃 𑌷𑍋𑌡𑌶 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌃 𑌶𑌰𑍀𑌰𑍇॥ అష్టౌప్రకృతయష్షోడశవికారాశ్శరీరే॥ என்று யஜுர்வேத கர்ப்போபநிஷத்திற் சொன்னபடி, எட்டுப்ரக்ருதிகளும் பதினாறுவிகாரங்களுமாயிருக்கும். ப்ரக்ருதி மஹதஹங்காரம் ஆகாசாதி பூதங்களாகிய எட்டும் ப்ரக்ருதி. ஜ்ஞாநேந்த்ரியம் கர்மேந்த்ரியம் மநஸ்ஸு விஷயங்களாகிய பதினாறும் விகாரங்கள். எட்டு ப்ரக்ருதி

* ஆதலாற்பகுதிதத்துவமூவெட்டதற்குமேனின்றதுசீவன்
ஓதுமச்சீவனரணற்கல்லா லொருவருக்கடிமையுமல்லன்
வேதநூலுரைத்ததிப்படியிதற்கு விரோதமாயுரைத்தசத்துவத்தின்
பேதமானதெலாமவைதிகரானோர் பேசுதல்மோகனப்பிராந்தி.

களும், சரீரத்தில் ஆபரணத்துக்கு ஒம்மிச்சைப்போலவும், பதினாறு விகாரங்களும், அவ்வாபரணத்திற் பதித்தரத்நங்கள்போலவு மிருக்கின்றன.

𑌅𑌸𑍍𑌥𑌿𑌮𑌾𑌂𑌸𑌤𑍍𑌵𑌚𑍋 𑌨𑌾𑌡𑍀 𑌰𑍋𑌮𑌂𑌚𑍈𑌵 𑌤𑍁 𑌪𑌂𑌚𑌕𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌃 𑌪𑌂𑌚 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌭𑍂𑌮𑌿𑌪𑌂𑌚𑌕𑌂॥ అస్థిమాంసత్వచో నాడీ రోమంచైవతుపంచకం క్షితేః పంచగుణాః ప్రోక్తాః ఇత్యేతేభూమిపంచకం॥ என்கிறபடி எலும்பு, மாம்ஸம், தோல், நரம்பு, மயிர் இவ்வைந்தும் பூமியின் அம்ஶம். 𑌲𑌾𑌲𑌾𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾 𑌶𑍁𑌕𑍍𑌲𑌂 𑌮𑍇𑌦𑌶𑍍𑌶𑍋𑌣𑌿𑌤𑌮𑍇𑌵 𑌚 𑌅𑌪𑌃 𑌪𑌂𑌚 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌜𑌲𑌪𑌂𑌚𑌕𑌂॥ లాలామూత్రంతథాశుక్లం మేదశ్శోణితమేవ చ ఆపఃపంచగుణాఃప్రోక్తాః ఇత్యేతేజలపంచకం॥ என்கிறபடி ஶ்லேஷ்மம், மூத்ரம், சுக்லம், மேதஸ்ஸு, ரக்தம் இவ்வைந்தும் ஜலாம்சம். 𑌕𑍍𑌷𑍁𑌧𑌾 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾 𑌤𑌥𑌾 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 𑌆𑌲𑌸𑍍𑌯𑌃 𑌕𑌾𑌂𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚 𑌅𑌗𑍍𑌨𑍇𑌃 𑌪𑌂𑌚 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌅𑌗𑍍𑌨𑌿𑌪𑌂𑌚𑌕𑌂॥ క్షుధాతృష్ణతథా నిద్ర ఆలస్యః కాంతిమేవచ అగ్నిపంచగుణాఃప్రోక్తా ఇత్యేతేఽగ్నిపంచకం॥ என்கிறபடி பசி, தாஹம், நித்ரை, ஆலஸ்யம், காந்தி இவ்வைந்தும் அக்நியம்சம். 𑌧𑌾𑌵𑌨𑌂 𑌚𑌲𑌨𑌂 𑌕𑌂𑌪𑌂 𑌕𑍁𑌂𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌣𑌂 𑌵𑌾𑌯𑍋𑌃 𑌪𑌂𑌚 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌵𑌾𑌯𑍁𑌪𑌂𑌚𑌕𑌂॥ ధావనంచలనంకంపం కుంచనంచప్రసారణం వాయోఃపంచగుణాఃప్రోక్తాః ఇత్యేతేవాయుపంచకం॥ என்கிறபடி தாவநம், சலநம், கம்பம், குஞ்சநம், ப்ரஸாரணம், இவ்வைந்தும் வாயுவம்சம். 𑌕𑌾𑌮𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌥𑌾 𑌲𑍋𑌭 𑌭𑌯𑌂 𑌮𑍋𑌹𑌨𑌮𑍇𑌵 𑌚 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑌮𑌾𑌸𑌾𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃॥ కామక్రోధస్తథాలోభ భయం మోహనమేవచ ఆకాశస్యగుణాఃప్రోక్తా స్సమాసాఃపరికీర్తితాః॥ என்கிறபடி காமம், க்ரோதம், லோபம், பயம், மோஹம் இவ்வைந்தும் ஆகாசாம்சம்.

ஆகாசத்தின்குணம் சப்தம், வாயுவின்குணம் ஸ்பர்சம், அக்நியின்குணம் ரூபம். ஜலத்தின்குணம் ரஸம். பூமியின்குணம் கந்தம். பூமியின்குணமான கந்தத்தை க்ரிஹிக்கும் க்ராணம். ஜலத்தின்குணமான ரஸத்தை க்ரஹிக்கும் ஜிஹ்வை. அக்நியின் குணமான ரூப

த்தை க்ரிஹிக்கும் சக்ஷு. வாயுவின்குணமான ஸ்பர்சத்தை க்ரஹிக்கும் த்வக்கு. ஆகாசகுணமான சப்தத்தை க்ரஹிக்கும் ஸ்ரோத்ரம். ஆகாசகுணமாய் செவியாலே க்ரஹிக்கப்படும் சப்தத்தைச்சொல்லும் வாக்கு. வாயுவின் குணமாய் த்வக்காலே க்ரஹிக்கப்பட்ட ஸ்பர்சத்திலே ப்ரவர்த்திக்கும் பாணி. அக்நியின்குணமாய் கண்ணாலே க்ரஹிக்கப்பட்ட ரூபத்திலே ப்ரவர்த்திக்கும் பாதம். ஜலத்தின்குணமாய் நாவாலே க்ரஹிக்கப்பட்ட ரஸாஸ்யமான ஜலாம்சத்தை விடும் உபஸ்தம். பூமியின்குணமாய் மூக்காலே க்ரஹிக்கப்பட்ட கந்தத்தையுடைய பூமியினம்சத்தை விடும் பாயு. பூமியம்சமாய் இவை யித்தனைக்கும் ஸஹகாரியாய் ராஜாவாய் முன்னேடி நடத்தும் மநஸ்ஸு. மநஸ்ஸினுடைய அவஸ்தாந்தரம்: புத்தி, அஹங்காரம், சித்தம். ஜலாம்சமாய் மறப்பொழித்து ஜ்ஞாநத்தைத் தூண்டுகைக்குரியது புத்தி. அக்நியினம்சமாய் இவை இத்தனையும் நானேசெய்தேனென்று அபிமாநிப்பது அஹங்காரம். வாயுவம்சமாய் இவை யித்தனையுந் தெளியப் பார்க்கைக்கு சக்தியுடையது சித்தம்.

இந்தச் சரீரத்திற் பொருந்தி வ்யாபரித்திருக்கும் வாயுக்களாவன: 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌪𑌾𑌨𑌉𑌦𑌾𑌨𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌨𑌶𑍍𑌚𑍈𑌵𑌸𑌮𑌾𑌨𑌕𑌃 𑌨𑌾𑌗𑌃𑌕𑍂𑌰𑍍𑌮𑌶𑍍𑌚𑌕𑍃𑌕𑌰𑍋𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑍋𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌃॥ ప్రాణోపానఉదానశ్చ వ్యానశ్చైవసమానకః నాగకూర్మశ్చకృకరో దేవదత్తోధనఞ్జయః॥ என்கிறபடி ப்ராணன் அபாநன் வியாநன் உதாநன் ஸமாநன் நாகன் கூர்மன் க்ருகரன் தேவதத்தன் தநஞ்சயன் என்பனவாம்.

இவைசெய்யும் வ்யாபாரமாவன: ப்ராணன், ஹ்ருதயப்ரதேசத்திலே நின்று ஊர்த்வமுகமாகப் புறப்பட்டு ப்ராணசுஷிரத்தோடேயெங்கும் உஸ்வாஸநிஸ்வாஸங்களைப் பண்ணும். அபாநன், குதஸ்தாநத்திலிருந்து மலமூத்ரங்களை விஸர்ஜநம்பண்ணும். ஸமாநன், நாபி ப்ரதேசத்திலிருந்து அந்நபாநாதிரஸங்களை வேறுபாடாக்கி வைஸ்வாநரமென்னும் உதராக்நிமுகத்திலே ஆஹுதி பண்ணும். உதாநன், கண்டத்திலிருந்து இருமல் காசம் முதலியவற்றை யுண்டாக்கும். வ்யாநன், சரீரமுழுதும் வ்யாபித்து அன்னரஸத்தை பூரிக்கப்பண்ணும். நாகன், உதரரோமகூபஸ்தாநங்களிலிருந்து விக்கல் புளகாங்குரம் வேர்வை முதலியவைகளை யுண்டாக்கும். கூர்மன், லலாடத்திலிருந்து கண்ணிமைகளை இமைப்பதும் விழிப்பதும் செய்யும். க்ருகரன், நாசிகாக்ர ஸ்தாநத்திலிருந்து தும்மல் இருமல் முதலிய வ்யாபாரங்களைப்பண்ணும். தேவதத்தன் குஹ்யகடிஸ்தாநத்தி

விருந்து சோம்பல் முறித்தல் கோட்டாவிவிடுதல் முதலான வ்யாபாரங்களைப்பண்ணும். தநஞ்சயன், சரீரத்திலிருக்கும் ப்ருதிவியின் அம்சமான எழுபத்தீராயிரம் நாடிகளில் ப்ரவேசித்து தேஹவிக்ருதி முதலான வ்யாபாரங்களைப்பண்ணும்.

அந்த எழுபத்தீராயிரம் நாடிகளில் ப்ரதாநங்களான பதினேழு நாடிகள் வ்யாபரிக்கும்படி யென்னென்னில், த்ருஷ்டிகளை ப்ராபித்துநின்று ரூபக்ரஹணங்களைப் பண்ணுமவைக்கு காந்தாரி நாடியென்றும் அஸ்தி ஜிம்ஹிகை நாடியென்றும் பெயர். ஸ்ரோத்ரத்தில்நின்று சப்தத்தை க்ரஹிக்குமவைக்கு புருஷாவலம்பி நாடியென்றும் புருஷநாடியென்றும் பெயர். நெற்றியில்நின்று தேவத்யானராகப்ரமாதங்களைப் பண்ணுவதுக்கு சுக்லநாடியென்றுபெயர். நாவில்நின்று ஸகலரஸங்களையும் க்ரஹிப்பதற்கு ஸரஸ்வதிநாடி யென்றுபெயர். அந்நத்தை ஆக்ர்ஷிக்குமதற்கு விஶ்வநாடியென்று பெயர். பாநத்தை ஆகர்ஷிக்குமதற்கு பயஸ்விநீநாடியென்று பெயர். அந்நபாநாதிஸூக்ஷ்மாம்ஶங்களை அண்டகபாலத்திற்கொண்டுபோய் அமிர்தக்ரஹணம்பண்ணுமதுக்கு சங்கினிநாடியென்றுபெயர். லிங்கதியால் தாதுமோக்ஷத்தைப் பண்ணுமதுக்கு பயஸ்விநிநாடியென்றுபெயர். லிங்கத்தைப்பற்றிநின்று சிறுநீரைவிடும்படி செய்வதற்கு வருணைநாடியென்று பெயர். அபாநவாயுவால் மலவிரோசநத்தைப் பண்ணுமதுக்கு ஆஹூதிநாடியென்று பெயர். இவற்றையகலாமலும் அணுகாமலும் நிற்பதற்கு ஜீவனி நாடியென்று பெயர். விஶங்கிநீ த்வயா நாபி வ்ருத்தி நாபௌ ப்ரதிஷ்டிதா: தத்ர நாட்யஸ்ஸமுத்பந்நா ஊர்த்வ திர்யக் அதோமுகா:॥ విశంకినీ తుయానాడి వృత్తినాభౌ ప్రతిష్ఠితాః తత్రనాడ్యాస్సముత్పన్నం ఊర్ధ్వతిర్యగధోముఖాః॥ என்கிறபடி விசங்கினியென்கிற நாடி வலயாகாரமாய் நாபிப்ரதேசத்திலிருக்கின்றது.

அவ்விடத்தில் ஊர்த்வமுகமாகவும் அதோமுகமாகவும் திர்யங்முகமாகவும் இருக்கிற நாடிகளெல்லாவற்றையும் நாபிப்ரதேசத்திலே சேர்த்து பந்தித்து நாநாவர்ணமாய்க் கிடப்பதற்கு நாபீசக்ரமென்று பெயர்.

குஹ்யாதாரந்தொடங்கி கபாலபர்யந்தம் முதுகெலும்பானது உள்வெளியோடேகூட இவைகட்கெல்லாம் ஊற்றங்கோலாயிருப்பதற்கு வீணாதண்டமென்றுபெயர். வீணையைப்போலிருக்கிற இதில்

வீணைக்குத் தந்தியைப்போல மேருதண்டாஶ்ரயாத் கோணஸ்தம் ஸுஷும்நா ஆதாரநாம்த்ரகா | மேருமத்ய ஸ்திதா ஸா ஸோமஸூர்யாக்நி நாடீ ஸமாவ்ருதே|| మూలాదారాత్రికోణస్థం సుషుమ్నాద్వాదశాంతగా। మూలోర్ధ్వ చిన్యాహంసోవా బ్రహ్మనాడీమహోచ్యతే॥ என்கிறபடி மூலாதாரந்தொடங்கி ப்ரஹ்மரந்த்ர பர்யந்தம் ஸுஷும்நா நாடியிருக்கும். அதற்கு ப்ரஹ்மநாடியென்று பெயர். இந்தநாடியால் அண்டாதிகளிலுள்ள ஸர்வத்தையுங் காணலாம். இடாயாம் ஸோமரூபேண வாயுர்வாமேந கச்சதி | பிங்களாயாம் து ஸூர்யாத்மா வ்யாப்ய தக்ஷிணபார்ஶ்வத:|| ఇడాయాం సోమరూపేణ వాయుర్వామేన గచ్ఛతి। పింగళాయాం తు సూర్యాత్మా వ్యాప్తిదక్షిణపార్శ్వతః॥ என்கிறபடி ஸுஷும்ந நாடிக்கு வாமபாகத்திலிருக்கிற இடாநாடிவழியாய் வாயு ப்ரவேசித்து சந்த்ரமண்டலத்தில் படிந்து இடதுமூக்கால்வெளிப்படும். ஸுஷும்நநாடிக்கு தக்ஷணபார்ஶ்வத்திலிருக்கிற பிங்களநாடிவழியாய் வாயுப்ரவேசித்து ஸூர்யமண்டலத்தில் படிந்து வலதுமூக்கால் வெளிப்பட்டுப்போம். இவ்விஷயம் இடா ச பிங்களா சைவ காந்தாரீ ஹஸ்திஜிஹ்விகா பூஷா ச அலம்பீ புருஷா ஶுக்லா சைவ ஸரஸ்வதீ விஶ்வாபயஸ்விநீ சைவ ஶங்கிநீ ச குஹூஸ்ததா நாடீ சக்ரமிதி ப்ரோக்தம் வீணாதண்டஸ்ததைவ ச|| ఇడా చ పింగళా చైవ గాంధారీ హస్తిజిహ్వికా పురుషావలంబీ పురుషశుక్లా చైవ సరస్వతీ విశ్వాపయస్వినీ చైవ శంకినీ చ కుహూ స్తథా నాభీచక్రమితి ప్రోక్తం వీణాదండ స్తథైవ చ॥ என்று சொல்லப்பட்டிருக்கிறது.

குணங்கள் மூன்றாவன: ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்பனவாம். ஸாத்விகம் - எவர்க்கும் ஜ்ஞாந ப்ரவர்த்தகமாயிருக்கும். ராஜஸம் - ராகத்வேஷங்களை விளைப்பித்து க்ரியையிலேமூட்டும். தாமஸம் - மோஹத்தை விளைப்பித்து ஜ்ஞாநவிநாசத்தைப் பண்ணும். ஸத்யம் ஜ்ஞாநம் ததா த்யாநம் ஶ்ருதிஸ்ம்ருதி திஷ்டிதம் (ஸதி ஷிஹாம்) ஸாஹஸம் நிஶ்சயம் தைர்யம் ஸாத்விகம் குணலக்ஷணம் என்றும், காமக்ரோதாஹங்காரம் தைந்யம் ப்ரவர்த்தநம் | அப்ரியம் ஸம்ஸாரம் ச ராஜஸம் குணலக்ஷணம் என்றும், அஜ்ஞாநம் மோஹநித்ராலஸ்யம் ... ஸ்வப்நம் ...

தா வாவிஷ்டம்வாஙவாஷிகவம் தாவேஸம்ஹோணமுக்ஷணம்|| స్యతం జ్ఞానంతపోమౌనం శృతిధర్మ తితిస్థితం (సతిసిహం) సాహసంనిశ్చయంధైర్యం సాత్వికంగుణలక్షణం என்றும், కామక్రోధమహంకారం మైధునంచప్రలాపనం అప్రియండంభమానంచ రాజసంగుణలక్షణం என்றும், అజ్ఞానంమోహనిద్రంచ చాపల్యంబుద్ధిహీనతా పాపిష్ఠంపరవాదిత్వం తామసంగుణలక్షణం|| என்றும் முக்குண லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன.

ஈஷணைகள் மூன்றுவன: அர்த்தேஷணை, புத்ரேஷணை, லோகேஷணை என்பனவாம். மலத்ரயமாவன: ஆணவம், காம்யம், மாயை என்பனவாம். இவற்றில் அர்த்தேஷணையாவது-ஆணவமென்கிறமலத்தால் அர்த்தக்ஷேத்ராதிகளிற் செல்லும் மோஹம். புத்ரேஷணையாவது - காம்யமென்கிற மலத்தால் புத்ரஸம்ஸாராதிகளிற் செல்லும் மோஹம். லோகேஷணையாவது - மாயையென்கிற மலத்தால் தேவ குருபக்திகளைப் பண்ணமல் அஜ்ஞாநத்தால் க்ஷுத்ரவிஷயங்களில் விழுந்து ஸம்ஸாரத்தையடைகை.

தாதுத்ரயமாவன: வாதம், பித்தம், ஶ்லேஷ்மம் என்பனவாம்.

ஷட்கோசங்களாவன: அஸ்தி, நரம்பு, மஜ்ஜை என்னும் பிதாவாலானவை மூன்றும்; த்வக்கு, மாம்ஸம், உதிரம் என்னும் மாதாவாலானவை மூன்றுமாம்.

பஞ்சகோசங்களாவன: அந்நமயம், ப்ராணமயம், மநோமயம், விஜ்ஞாநமயம், ஆநந்தமயம் என்பனவாம். அந்நமயமாவது-ஸ்தூல சரீரக்கூட்டம். ப்ராணமயமாவது - தசவாயுக்கூட்டம். மநோமயமாவது-அந்தக்கரணக்கூட்டம். விஜ்ஞாநமயமாவது-ஸங்கல்பவிகல்பக் கூட்டம். ஆநந்தமயமாவது - முன்சொன்ன நான்கையுங்கடந்து ஜ்ஞாநஸ்வரூபத்தின் பரிணமமான ஆநந்தமயக்கூட்டம்.

ஷடூர்மிகளாவன: க்ஷுத், பிபாஸை, சோகம், மோஹம், ஜநநம், மரணங்களென்கிறவையாம்.

அவஸ்தாத்ரயங்களாவன: ஜாக்ரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி யென்பனவாம். ஜாக்ராவஸ்தையாவது - இந்த நவத்வாரபுரி யென்கிற க்ஷேத்ரத்திலே க்ஷேத்ரஜ்ஞனென்கிற க்ஷேத்ரியன் ஜ்ஞாநப்ரஸாரணத்வாரமான ஶ்ரோத்ராதி இந்த்ரியங்களாகிற சேனைகளோடே கலந்து அவ்வோவிஷயங்களை யநுபவிக்கை. ஸ்வப்நாவஸ்தையாவது - பகலில் ஜாக்ரமெல்லாங்கழிந்து அந்தகாரம் வந்தவாறே அவ்வோவிஷயங்களிற்சென்றகரணத்ரயங்களைத் தந்தாமிடங்களிலேவி,

மநஸ்ஸாகிற ஸேநாபதி, புத்திசித்த அஹங்காரங்களோடேகூடி ஜாக்ரவேளையிற் கண்டவையும் காணப்போகிறவையும் தோற்ற இருக்கை. ஸுஷுப்தியவஸ்தையாவது-இந்த ஆத்மாஜ்ஞாநத்தோடேஸுஷும்நையென்கிற ப்ரஹ்மநாடி த்வாரத்திலே புரிதத் ப்ரதேசத்திலே புக்கு ப்ரஹ்மத்தோடு சேர்ந்து அக்நியில் புக்க ஹயஸ்ஸைப்போல் ப்ரஹ்மஸ்வரூபமும் தன்னுடைய ஸ்வரூபமுமாய் ஜாக்ராவஸ்தையில் தன்னை வர்ணாஸ்ரமாதி விசிஷ்டனாக அநுஸந்தித்திருந்த உணர்வற்றிருக்கை.

ஸப்ததாதுக்களாவன: த்வக்கு, உதிரம், மாம்ஸம், மேதஸ்ஸு, அஸ்தி, மஜ்ஜை, சுக்லம் என்பனவாம்.

ராகத்வேஷாதிகள் எட்டாவன: ராகமாவது-ஆசை. த்வேஷமாவது-கோபம். லோபமாமது-லுப்தத்வம். மோஹமாவது-தரியாமை. மதமாவது-களிப்பு. மாஸ்சர்யமாவது-பொறாமை. அஹங்காரமாவது - என்னொடொப்பாராரொன்கை. டம்பமாவது-கர்வம்.

தாபத்ரயங்களாவன: ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்பனவாம். ஆத்யாத்மிகம் - சாரீரமாயும் மாநஸமாயும் இரண்டுபடிப்பட்டிருக்கும். சாரீரமாவது - ஜ்வராதிகளால் வரும் வ்யஸநம். மாநஸமாவது - காமக்ரோதங்களால்வரும் வ்யஸநம். ஆதிபௌதிகமாவது - ம்ருகபக்ஷி மநுஷ்யபூதப்ரேத பிசாசராக்ஷஸாதிகளால்வரும் வ்யஸநம். ஆதிதைவிகமாவது-சீதோஷ்ணவாதாதபவர்ஷாம்பு வித்யுதாதிகளால்வரும் வ்யஸநம்.

ஆத்யாத்மிகமாநஸத்தில் காமமாவது - கண்ணால்கண்டு ஆசைப்பட்ட பதார்த்தத்தை அநுபவித்தல்லது நிற்கவொண்ணாத தசை. க்ரோதமாவது - ஆசைப்பட்டது கிடையாதபோது ஸமீபத்திலும் தூரத்திலுமிருப்பவர்கள் விரோதம்பண்ணினதாகநினைத்துக் கோபமுண்டாகும் தசை. மோஹமாவது - க்ருத்யாக்ருத்ய விவேகமற்று நிர்வ்யாபாரமாயிருக்கை. சோகமாவது - கிடையாத பதார்த்தத்தைக்குறித்துப்பிறக்கும் துக்கம். அஸூயையாவது - குணங்களில் தோஷத்தை யேறிட்டு அநுஸந்திக்கை. அபிமாநமாவது - பிறர்பரிபவத்தால் தனக்குப்பிறக்கும் மாநஸவிகாரம். ஈர்ஷையாவது-பரஸம்ருத்தியைப்பொறுதொழிகை. மாத்ஸர்யமாவது - அந்தப்பொறாமையை அநுஷ்டாந பர்யந்தமாக்கும் தசாவிசேஷம்.

நவத்வாரங்களாவன: நயநம்-உ. கர்ணம்-உ. நாசி-உ. வாய்-க. பாயு-க. உபஸ்தம்-க. என்பவையாம்.

ஹ்ருதயத்திலிருக்கும் பரமாத்மாவோடு ஆத்மா, ஸுஷும்நநாடியாலே வெளியில்புறப்படுகிற த்வாரத்துக்கு ப்ரஹ்மந்த்ரமென்று பெயர்.

ஸ்தூலசரீரமாவது: மஹாபூதங்களும், இந்த்ரியங்களும், ஸப்த தாதுக்களும், எழுபத்திரண்டாயிரம் நாடிகளும்; சதஸஹஸ்ர கோடி ரோமங்களும் சேர்ந்தது.

ஸூக்ஷ்மசரீரமாவது: சப்தாதிவிஷயபஞ்சக தந்மாத்ரைகளும் ப்ராணாதிபஞ்சவாயுக்களும் அந்தக்கரண சதுஷ்டயமும் சேர்ந்தது.

𑌆𑌧𑌾𑌰𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌨𑌾𑌭𑍌 𑌹𑍃𑌦𑌯𑌸𑌰𑌸𑌿𑌜𑍇 𑌤𑌾𑌲𑍁𑌮𑍂𑌲𑍇 𑌲𑌲𑌾𑌟𑍇 𑌦𑍍𑌵𑍇𑌪𑌤𑍍𑌰𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌰𑍇 𑌦𑍍𑌵𑌿𑌦𑌶𑌦𑌶𑌦𑌳𑍇 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌰𑍍𑌧𑍇 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑍇 𑌨𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍇 𑌬𑌾𑌲𑌮𑌧𑍍𑌯𑍇 𑌡𑌫𑌕𑌠𑌸𑌹𑌿𑌤𑍇 𑌕𑌣𑍍𑌠𑌦𑍇𑌶𑍇 𑌸𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌂𑌕𑍍𑌷𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌰𑍍𑌣𑌰𑍂𑌪𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿, ఆధారే లింగనాభౌ హృదయ సరసిజే తాలమూలే లలాటేద్విపత్రేషోడశాంతేద్విదళధవళే ద్వాదశార్ధే చతుష్కేనాసాంతే బాలమధ్యే డఫకట సహితేకంఠదేశే స్వరాణాంహంక్షంతత్త్వార్థయుక్తం సకలదళయుతం వర్ణరూపంనమామి.

மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தம், ஆஜ்ஞேயம் என்கிறவை ஷட்சக்ரங்கள். அவைகளில், மூலாதாரத்துக்கு ஸ்தாநம் - குஹ்யத்துக்கும் குதத்துக்கும் நடுப்ரதேசம்; த்ரிகோணம்; சதுர்த்தளபத்மம்; பீஜாக்ஷரம் - వశషస; வர்ணம் ரக்தம்; அதிதேவதை - விஷ்வக்ஸேநர்.

ஸ்வாதிஷ்டாநத்துக்கு ஸ்தாநம் - லிங்கப்ரதேசம்; சதுஷ்கோணம்; ஷட்தளபத்மம்; வர்ணம்-பீதம்; பீஜாக்ஷரம் - బభమయరల; அதிதேவதை - ஸங்கர்ஷணர்.

மணிபூரகத்துக்கு ஸ்தாநம் - நாபிப்ரதேசம்; அர்த்தசந்த்ராகாரம்; தசதளபத்மம்; வர்ணம்-நீலம்; பீஜாக்ஷரம்-డఢణతథదధనపఫ அதிதேவதை - ப்ரத்யும்நர்.

அநாகதத்துக்கு ஸ்தாநம் - ஹ்ருதயம்; த்ரிகோணம்; த்வாதசதளபத்மம்; வர்ணம்-தவளம்; பீஜாக்ஷரம்-కఖగఘఙచఛజఝఞటఠ; அதிதேவதை - அநிருத்தர்.

விசுத்தத்துக்கு ஸ்தானம்-கண்டம்; ஷட்கோணம்; ஷோடசதள பத்மம்; வர்ணம்-ஸ்படிகம்; பீஜாக்ஷரம் - [illegible]; அதிதேவதை-வாஸுதேவர்.

ஆஜ்ஞேயத்துக்கு ஸ்தானம் - ப்ரூமத்யம்; த்ரிகோணம்; த்விதள பத்மம்; வர்ணம் - மாணிக்கம்; பீஜாக்ஷரம்-ஹம்க்ஷம்; அதிதேவதை - பரவாஸுதேவர்.

இனி மஹச்சக்ரமென்பதற்கு ஸ்தானம் - ப்ரஹ்மரந்த்ரம்; ஸஹஸ்ரதளபத்மம்; பீஜாக்ஷரம் - ப்ரணவம். [illegible] என்கிறபடி ப்ரணவஸ்வரூபியான பகவான், அந்தஸஹஸ்ரதளபத்மத்திலே யெழுந்தருளியிருந்து கொண்டு, [illegible] என்கிறபடி ஆயுஸ்ஸு, தொழில், தனம், வித்தை, மரணம் இவ்வைந்தையும் லலாடத்திலே யெழுதுவன். அங்கு அம்ருதம், ஸூர்யமண்டலம், சந்த்ரமண்டலம், அக்நிமண்டலம் முதலியவைகளுமிருக்கின்றன.

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

அகாரோ நயதே விஶ்வம் உகாரஶ்சாபி தைஜஸம்
மகாரஶ்ச புந: ப்ராஜ்ஞம் நாமாத்ரே வித்யதே கதி:॥

அமாத்ரஶ்சதுர்தோऽவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபஶம:
ஶிவோऽத்வைத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விஶத்யா
த்மநாத்மாநம் ய ஏவம் வேத ॥ ய ஏவம் வேத ॥

ஓங்காரம் பாதஶோ வித்யாத் பாதா மாத்ரா ந ஸம்ஶ
ய: ஓங்காரம் பாதஶோ ஜ்ஞாத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத்॥

யுஞ்ஜீத ப்ரணவே சேத: ப்ரணவோ ப்ரஹ்ம நிர்பயம்
ப்ரணவே நித்யயுக்தஸ்ய ந பயம் வித்யதே க்வசித் ॥

ப்ரணவம் ஹீஶ்வரம் வித்யாத் ஸர்வஸ்ய ஹ்ருதி ஸம்ஸ்திதம் ।
ஸர்வவ்யாபிநமோங்காரம் மத்வா தீரோ ந ஶோசதி ॥

விஷ்வக்ஸேநஸம்ஹிதாயாம் - சதுர்விஶ்வஸ்ய ஸம்பவாந்
முமுக்ஷூணாம் ஹிதாய ச - அந்யேஷாமபி லோகாநாம்
ஸ்ருஷ்டிஸ்தித்யந்தஸித்தயே, உபாஸகாநாம் அநுக்ரஹார்த்தம் ஜக
தோ ரக்ஷணாய ச - ஆவிராஸீத்பகவத: பஞ்சாயாம ப
ரிக்ஷ்யத: | ஸூக்ஷ்மஸ்ஸோயம் ஸர்வஶாஸ்த்ர ஷாட்குண்யபூ
த: | ஸோயம் ப்ரத்யும்நாநிருத்த ஹஸ்த த்ரைகாலவ்யூஹ:|
ஸோயம் ஸங்கர்ஷணோ வ்யூஹஸ் த்ரைகாலவ்யூஹ: । ஜ்ஞா
நஶக்தி ப்ரதீகாஶ ஷட்ஶாஸ்த்ர ஷாட்குண்யபூ த:| ததா
நாநாரூபநிர்யூயம் ஸ்வயமேவ ஸம்பந்நேந | த்ரைகா
லவ்யாப்த ஸாக்ஷாத்விக வப்ரஹ:॥

பாதாநாத்மயோர்விம்ஜம் ப்ரணவம் பாவயேத்புந:|
உபாஸகாநாம் ப்ரஹ்மாணம் யஶ்வரஶ்ச கீர்த்யதே | ஶா
ஞ்ஜோதிதா த்ப்ரதத்வ பாதாநாத்ம த்ரயம் ததா | உபா

[illegible]

[illegible]

మాండూక్యోపనిషత్

ఓమిత్యేతదక్షరమిదగ్ంసర్వంతస్యోప వ్యాఖ్యానంభూతంభవద్భవిష్య దితి సర్వమోంకార ఏవయచ్చాన్య త్రికాలాతీతంతదప్యోంకారఏవ॥

సర్వగ్ం హ్యేతద్బ్రహ్మాయమాత్మా బ్రహ్మసోయ మాత్మాచతుష్పాత్॥

ఏషసర్వేశ్వర ఏషసర్వజ్ఞఏషోంతర్యామ్యేషయోనిసర్వస్యప్రభవాప్యయోహిభూతానాం॥

స్వప్ననిద్రాయుతావాద్యౌ ప్రాజ్ఞస్త్వ స్వప్ననిద్రయానని్ద్రాంనైవచ స్వప్నం తుర్యేపశ్యంతినిశ్చితాః॥

అకారోనయతే విశ్వముకారశ్చాపితైజసం।

మకారశ్చపునః ప్రాజ్ఞంనామాత్రేవిద్యతేగతిః॥

అమాత్రశ్చతుర్థోవ్యవహార్యః ప్రపంచోపశమశ్శివోద్వైతఏవమోంకార ఆత్మైవంసంవిశత్యాత్మనాత్మానంయ ఏవంవేద॥ యఏవంవేద॥

ఓంకారంపాదశో విద్యాత్పాదామాత్రాన సంశయం ఓంకారంపాదశోజ్ఞాత్వానకించిదపిచింతయేత్॥

యుంజీతప్రణవేచేతః ప్రణవోబ్రహ్మనిర్భయం ప్రణవే నిత్యయుక్తస్యన భయంవిద్యతే క్వచిత్॥

ప్రణవంహీశ్వరం విద్యాత్సర్వస్యహృది సంస్థితం ।

సర్వవ్యాపినమోంకారం మత్వాధీరోనశోచతి॥

విష్వక్సేనసంహితాయాం-చతుర్విధస్స భగవాన్ముముక్షూణాం హితాయవై-అన్యేషామపిలోకానాం సృష్టిస్థిత్యన్తసిద్ధయే ఉపాసకానుగ్రహార్థం జగతో రక్షణాయచ - ఆవిరాసీద్భగవతఃపఞ్చాయుధ పరిష్కృతః । రుక్మాభస్సోయమమలస్సర్వశాస్త్రేషు శబ్దితః । సోయంప్రద్యుమ్ననామ్నాభూత్తదేకాన్తవపుర్ధరః । సోయంసఙ్కర్షణాఖ్యోభూత్తదేకాన్తవపుర్ధరః।ఇన్ద్రనీల ప్రతీకాశఏవశాస్త్రేషు శబ్దితః । తతోనామ్నాఽనిరుద్ధోయంస్వయమేవా భవత్తనే । తదేకాన్తవ పుర్యుక్తస్తాత్త్విక ఘనప్రభః॥

చాతురాత్మ్యమథోపిత్వంకృపయాపరమేష్ఠినః । ఉపాసకానుగ్రహార్థంయఃపరశ్చేతికీర్త్యతే । శాన్తోదితాత్మనివృత్తిశ్చచాతు రాత్మ్యత్రయం తథా । ఉపాసకానుగ్రహార్థం సేనేశమమతత్వనః । సుషుప్తి స్వప్నసంజ్ఞం యజ్జాగ్రత్సంజ్ఞంతథాపరం చాతురాత్మ్యంమహాభాగ పఞ్చమంపారమేశ్వరం ॥

ఆద్యోవ్యూహో మయాప్రోక్తోహ్య పరంత్రితయంశృణు । ఉపాసకానుగ్రహార్థంస్వప్నాది పదసంస్థితం । స్వప్నాద్యవస్థాభేదస్తుధ్యాయినాం భేదశాన్తయే । తత్తత్పదస్థ జీవానాంతన్నివృత్త్యర్థమేవచ । స్వప్నాద్యవస్థజీవానా మధిష్ఠాంతారఏవతే । కర్మాత్మనాఞ్చసేనేశతత్పదస్థోమమేచ్ఛయా ఉపాస్యోహంమహాభాగ పదభేద ప్రయోజనం॥ இத்யாதிகளில்

ஸமஸ்தபதமாய் அகண்டமாயும், வ்யஸ்தபதமாய் ஸகண்டமாயுமிருக்கிற ஆகாரங்களையுடையது ப்ரணவம். அவற்றில் வ்யஸ்தபதமான ஸகண்ட ப்ரணவத்திலுள்ள அகார உகார மகாரநாதங்கள் நான்கில் ஸுஷுப்த்யவஸ்தையையுடைய ஜீவர்களுக்கு அதிஷ்டாத்ருத்வேந தத்பதஸ்தராய் மகாரவாச்யராயிருக்கிறவர் ஸங்கர்ஷணனென்றும், ஸ்வப்நாவஸ்தையையுடைய ஜீவர்களுக்கு அதிஷ்டாத்ருத்வேந தத்பதஸ்தராய் உகாரவாச்யரா யிருக்கிறவர் ப்ரத்யும்நனென்றும், ஜாக்ராவஸ்தையையுடையஜீவர்களுக்கு அதிஷ்டாத்ருத்வேந தத்பதஸ்தராய் அகாரவாச்யராயிருக்கிறவர் அநிருத்தனென்றும், ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்த்யவஸ்தைகளில்லாதவராய் துர்யாவஸ்தையையுடைய ஜீவர்களுக்கு அதிஷ்டாத்ருத்வேந தத்பதஸ்த

ராய் அமாத்ராயென்று சொல்லப்படுகிற நாதத்துக்கு வாச்யராயிருக்கிறவர் வ்யூஹவாஸுதேவரென்றும், துரீயாதீதராய் ஸமஸ்தபதமாகிய அகண்டப்ரணவத்துக்கு வாச்யராயிருக்கிறவர் பரவாஸுதேவரென்றும் அந்தப்பரவாஸுதேவரை உபாஸிப்பவர்கள்பரமபதத்தை அடைவார்களென்றும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறது.

பகவச்சேஷமான அசித்தை ஸ்வசேஷமென்றும், பகவச்சேஷமான ஆத்மாவை ஸ்வதந்த்ரமென்றும், ஸர்வசேஷியான ஈஸ்வரனை பராதீநனென்றும், சித்தை அசித்தென்றும், அசித்தைச்சித்தென்றும், ஈஸ்வரனே சிதசித்தென்றும் நினைக்கும் அஜ்ஞாந அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களையுண்டுபண்ணி ஸ்வவிஷயத்திலேபோகபுத்தியை விளைப்பித்துத் தன்னிடத்திலே துவக்கிக்கொண்டு, சப்தாதிவிஷயபோக தத்பரராம்படிசெய்து ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை அறியவொட்டாமற்செய்வது மாயையென்பதையறிந்து அதற்குட்படாமல் நாம் தேஹமன்று; தேஹாநுபந்திகளான தாரபுத்ராதிகளும் நம்முடையதன்று; நாம் தேஹேந்த்ரியமநః ப்ராணஜ்ஞாநங்களைக்காட்டிலும் வேருய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபராய் பகவச்சேஷபூதராய், பரதந்த்ரராயிருப்பவர்கள்; நாம் ஸ்வதந்த்ருமன்று; அந்யசேஷபூதருமன்று. ஆதலால், 𑌶𑌰𑍀𑌰𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑌨𑌂॥ శరీరమాద్యం ఖలు ధర్మసాధనం என்றும் 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾 𑌦𑍇𑌹𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌕𑍃𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌹𑌸𑍍𑌤𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌾। విచిత్రా దేహసంపత్తి రీశ్వరాయనివేదితుం పూర్వమేవకృతాబ్రహ్మన్ హస్తపాదాదిసంయుతా ॥ என்கிறபடி போகமோக்ஷஸாதநங்களை யடையும்படி கொடுத்த சரீரத்தைக்கொண்டு இஹத்தில், பித்ரு மாத்ரு ரத்ந தந தாந்ய வஸ்த்ர அந்ந பாந புத்ர மித்ர களத்ர பசு க்ருஹ க்ஷேத்ர சந்தந குஸும தாம்பூலாதிபதார்த்தங்களில் சப்தாதிவிஷயாநுபவத்தால் வரும் ஸுகவிசேஷங்களும், பரத்தில், இஹலோக போகத்தைக் காட்டிலும் விலக்ஷணமாய் தேஜோரூபமான ஸ்வர்க்காதிலோகங்களிலேசென்று ஆர்ஜித்த புண்யத்துக்கீடாக அம்ருதபாநம்பண்ணி அப்ஸரஸ்ஸுக்களோடே சப்தாதிவிஷயாநுபவம் பண்ணுகைக்கும், அணிமா-மஹிமா-கரிமா-லகிமா-ப்ராப்தி-ப்ராகாம்யம்-ஈசத்வம் - வசித்வம் என்கிற அஷ்டைஸ்வர்யங்களுக்கும் அஞ்ஜநாஸித்தி-கடிகாஸித்தி, பாதுகாஸித்தி, சரீரஸித்தி- பரகாயப்ரவேசம்- தூரஸ்ரவணம்- தூரத்ருஷ்டி, த்ரிகாலஜ்ஞாநம் என்கிற அஷ்டமாஸித்திகளுக்கும் ஸாதநமான யமநியம

ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹாரத்யாந தாரண ஸமாதிகளாகிறஅஷ்டாங்கயோகங்களோடுங்கூடிய யஜ்ஞ தாந தபோ த்யாந ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞ அக்நிஹோத்ர தீர்த்தயாத்ர புண்யக்ஷேத்ரவாஸ க்ருச்ர சாந்த்ராயண புண்யநதீஸ்நாந வ்ரத சாதுர்மாஸ்யபலமூலாசந சாஸ்த்ராப்யாஸ ஸமாராதந உபதர்ப்பணாதிரூபகர்மயோகத்தைச்செய்து அல்பாஸ்திரத்வங்களான போகங்களையடைவதும்ப்ரயோஜநமில்லாததையும், பத்நியானவள், பதியோடுசேர்ந்து பதியினுடைய ஸ்வரூபரூபகுணவிபவைஶ்வர்யாதி சேஷ்டிதங்களை அநுபவிப்பதைவிட்டுத் தான் தனியேயிருந்துகொண்டு, தன்னழகைத் தானனுபவிக்குமாபோலே விரஜைக்கக்கரையில் பரமபதத்துக்கு வெளியில் ஒரு மூலையிலிருக்கும் கைவல்யலோகத்திலே ஆத்மாநுபவம் பண்ணிக்கொண்டிருப்பது ஸ்திரமாயிருந்தபோதிலும் அணுஸ்வரூபமான ஆத்மாநுபவம் அல்பமாகையால் அதனால் ப்ரயோஜநமில்லாததையுமறிந்து-ஆத்மா பரமபதத்துக்குப்போய் பதிம்விஶ்வஸ்யாத்மேஶ்வரம் ॥ పతింవిశ్వస్యాత్మేశ్వరం ॥ என்று ஶ்ருதியில்சொன்னபடி உபயவிபூதிக்கும் பதியாயிருக்கிற பரவாஸுதேவரோடு சேர்ந்து ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதேதி ॥ సోఽశ్నుతేసర్వాన్ కామాన్ సహబ్రహ్మణావిపశ్చితేతి ॥ என்று தைத்திரீயோபநிஷத்தில் சொன்னபடியே அந்தப்பரவாஸுதேவருடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும், அந்த திவ்யாத்மஸ்வரூபத்தை ஆஶ்ரயித்திருக்கும் ஜ்ஞாநசக்திபலைஶ்வர்ய வீர்யதேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவார்ஜவ ஸௌஹார்த்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்யௌதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய ஶௌர்யபராக்ரம ஸத்யகாம ஸத்யஸங்கல்பாத்யபரிமித கல்யாணகுணங்களையும், அந்த திவ்யாத்ம குணப்ரகாசகமாய் ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமிதகுணநிதியான திவ்யமங்களவிக்ரஹத்தையும், ததாதாரகமான கிரீடாதி நூபுராந்தமான திவ்யபூஷணங்களையும், அவற்றோடு விகல்பிக்கலாம்படியான சங்கசக்ராதிதிவ்யாயுதங்களையும், இதடங்கக்காட்டி வெரித்தநிலாவாகாமே ஸர்வேஶ்வரனது ஸ்வரூபரூபகுணாதிகளை யநுபவித்துக்கொண்டிருக்கும் லக்ஷ்மீப்ரப்ருதி திவ்யமஹிஷிவர்க்கத்தையும், அச்சேர்த்தியிலே அடிமைசெய்கையே தங்களுக்கு தாரகாதிகளாகவுடையரான நித்யமுக்த வர்க்கங்களையும், பரிபூர்ணபரப்ரஹ்மாநுபவ கைங்கர்யங்களுக்கு வர்த்தகமாய் நிரதிசயாநந்த மயமாயிருக்கும் நலமிந்தமில்லதோர் நாடான பரமபதத்தையும், ப்ரக்ருதி

புருஷகாலாத்மகமான லீலாவிபூதியினுடைய ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களை அத்வாரகமாகவும் ஸத்வாரகமாகவும் செய்துகொண்டிருப்பதையும் அநுபவித்து அநுபவஜநிதப்ரீதியினால் அகிலகைங்கர்யங்களைச்செய்ய, அத்தால் நிரதிசய ப்ரீதியையுடைய பரப்ரஹ்மத்தைக்கண்டு நிரதிசயாநந்தபரர்களாவதற்குத் தக்க-யம, நியம, ஆஸந,ப்ராணாயாம, ப்ரத்யாஹார,த்யாந,தாரண, ஸமாதிரூபமான அஷ்டாங்கயோகக்ரமத்தாலே யோகாப்யாஸ காலத்தளவும் ஆத்மாவினுடைய தர்மபூத ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை விஷயமாக்கி ஆத்மா தேஹேந்த்ரியமந: ப்ராணஜ்ஞாந விலக்ஷணமாய் அஜடமாய்ஆநந்தரூபமாய் நித்யமாய் அணுவாய் அவ்யக்தமாய் நிரவயவமாய் நிர்விகாரமாய் ஜ்ஞாநாஸ்ரயமாய்ஈஸ்வரனுக்குநியாம்யமாய்தார்யமாய்சேஷமாயிருப்பதை ஸாக்ஷாத்கரித்து, அநந்தரம்இந்தகர்மயோகஸஹக்ருதஜ்ஞாநயோகத்துக்குஸர்வேஸ்வரனை விஷயமாக்கி அவ்விஷயந்தன்னைசங்கசக்ரசதாதரமாகவும் பீதாம்பரயுக்தமாகவும் கிரீடாதி நூபுராந்ததிவ்யபூஷணாலங்க்ருதமாகவும் லக்ஷ்மீஸஹிதமாகவுமநுபவித்து யோகாப்யாஸக்ரமத்தாலே அநுபவகாலத்தைப்பெருக்கி அநவரதபாவநா ரூபமாக்குகிற ஜ்ஞாநயோகத்தையும், ஜ்ஞாநயோகஸஹக்ருதமாய் தைலதாராவதவச்சிந்நஸ்ம்ருதி ஸந்தாநரூபமான அவ்வநுபவத்தை பக்திரூபாபந்நமாக்கி அதைவிகஸிக்கும்படி பரிணமிப்பிக்கையாகிற பக்தியோகத்தையாவது

இப்படி கர்மயோக ஜ்ஞாநயோகங்களால் ஸஹகரிக்கப்பட்ட பக்தியோகத்தில் அசக்தர்க்கும் அப்ராப்தர்க்கும் ஸுகரமுமாய்சீக்ரபலப்ரதமுமாயிருக்கும்ப்ரபத்திஉபாயம், ஒருதரம் செய்யவேண்டியதாய் உபாயாநுஷ்டாந ஸமநந்தரமுண்டாகக் கடவதான பகவத்விஷயாநுபவங்களெல்லாம் ப்ராப்யகோடி கடிதங்களாகையாலே ஸ்வரூபாநு ரூபமாயிருக்கும். இதுதான் ஆர்த்தரூப ப்ரபத்தியென்றும் த்ருப்த ரூபப்ரபத்தியென்றும் இரண்டுவிதமாயிருக்கும். சரீராந்தர ப்ராப்தியிலும் ஸ்வர்க்காநுபவத்திலும் விரக்தியும், நரகாநுபவத்தில் பீதியும்பிறந்து அதினுடையநிவ்ருத்திக்கும் பகவத் ப்ராப்திக்கும் உறுப்பாக ஸதாசார்யோபதேசக்ரமத்தாலே உபாயஸ்வீகாரம் பண்ணி விபரீதப்ரவ்ருத்தி நிவ்ருத்தராய் வேதவிஹிதமான வர்ணாஸ்ரமாநுஷ்டாநமும் பகவத்பாகவதகைங்கர்யங்களும் மாநஸவாசககாயகங்களாலே யதாசக்தியநுஷடித்து ஸர்வபரங்களையும் ஸர்வேஸ்வரன் பக்கலிலே பொகட்டுநிர்ப்பாரா யிருக்கை யாகிற இந்த ப்ரபத்தியையாவது செய்யவேண்டும்.

ஆத்மார்த்தமாக க்ருஹார்ச்சனையையும் ப்ரார்த்தமாக க்ராமார்ச்சனையையும் விதித்த பகவத் சாஸ்த்ரத்தில் சர்யாபாத க்ரியாபாத ஜ்ஞாநபாதங்களில் சொன்ன சர்யைக்ரியையோக ஜ்ஞாநங்களில் லோகேஷு விஷ்ணோர்நிவஸந்தி கேசித் ஸமீபம்ருச்சந்தி ச கேசிதந்யே । அந்யேது ரூபம் ஸத்ருசம் பஜந்தே ஸாயுஜ்யமந்யே ந து மோக்ஷ உக்த:॥ లోకేషువిష్ణోర్నివసంతికేచిత్ సమీపమృచ్ఛంతిచకేచిదన్యే । అన్యేతురూపం సదృశంభజంతే సాయుజ్యమన్యేనతుమోక్షఉక్తః ॥ என்பதின்படி ஸ்ரீவிஷ்ணு லோகாதிகளில் ஸாலோக ப்ராப்திக்கு ஹேதுவானதாய் ஸந்நிதி நிர்மாணஞ் செய்தல், ஸ்வாமியைப்ரதிஷ்டை செய்தல், திருநந்தநவநஞ்செய்தல், திருமாலை சேர்த்தல், தீபம் ஸமர்ப்பித்தல், திருவலகிடல், திருமெழுகிடல், அமுதுபடி சாத்துபடி ஸமர்ப்பித்தல், அவிச்சிந்நமாக ஆராதநாதிகள் நடந்தேறி வருவதற்குத்தக்க வரும்படியுள்ள க்ஷேத்ரபுர க்ராமங்களை ஸமர்ப்பித்தல் பர்யந்தமான சர்யையும், தேஹசுத்தி த்ரவ்ய சுத்திகளோடு ஸிம்ஹாஸநம் முதலிய ஆறு ஆஸநங்களில் பிராட்டிமார்களோடு பெருமாளை யேறியருளப்பண்ணி ஷோடசோபசாரங்களைச் செய்து ஆராதிக்கிற ஸாமீபப்ராப்திக்கு ஹேதுவான க்ரியையையும், ஸ்வாமியின் திவ்யமங்கள விக்ரஹத்தை சங்கசக்ர கதாதரமாகவும் பீதாம்பரயுக்த மாகவும் கிரீடாதிநூபுராந்த திவ்யபூஷணாலங்க்ருத மாகவும் லக்ஷ்மீ ஸஹிதமாகவும் த்யாநித்து அநுபவித்து அநவரத பாவனை பண்ணுகிற ஸாரூப ப்ராப்திக்கு ஹேதுவான யோகத்தையும், ஸாயுஜ்ய ப்ராப்திக்கு ஹேதுவான - தத்வஜ்ஞாந பூர்வகமாய் த்யாஜ்ய கோடியிலுத்தீர்ணமாய் உபாயகோடியில் அநநுப்ரவிஷ்டமாய் ப்ராபகாந்தர பரித்யாக பூர்வகமாய் பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய் சைதந்யகார்யமாய் ப்ரார்த்தநாகர்ப்பமாய் பகவந்முகவிகாஸ ஹேதுவாய் ஸ்வரூபாநுரூபமாய் வ்யபிசார விளம்பவிதுரமாயிருப்பதொரு அத்யவஸாயாத்மக ஜ்ஞாநவிசேஷத்தையுமுடையவர்களாய் ஸதாசார்யன் உபதேசித்தபடியாவது அல்லது இவனுக்காக உபாயாநுஷ்டாநம்பண்ணி ரக்ஷிக்கவல்ல ஸதாசார்யனாவது த்வயமந்த்ர பூர்வகமாய் ப்ரபத்திபண்ணும் போது பரத்வவ்யூஹவிபவ அந்தர்யாமிகளைவிட-கண்களுக்கு விஷயமாய் கண்டுபற்றுகைக்குறுப்பான ஸௌலப்யமும் மேன்மைகண்டகலாமைக் குறுப்பானஸௌசீல்யமும் கார்யஞ்செய்யுமென்று விஸ்வஸிக்கைக் குறுப்பான ஸ்வாமித்வமுங்குற்றங்கண்டு வெருவாமைக் குறுப்பானவாத்ஸல்யமும்

கார்யாபாதகங்களான ஜ்ஞாநசக்த்யாதிகளும் இருட்டறையில்விளக்கைப்போலே ப்ரகாசிக்கும்படி கோயில்களிலும் க்ருஹங்களிலும் அர்ச்சாரூபமா யெழுந்தருளியிருக்கிற பகவானே முக்ய விஷயமாகையால், அப்பெருமான் திருமுன்பே சென்று பகவச்சாஸ்த்ரத்தில் ஸஹஸ்ரவராயா நா ஸாஙயொகிவெ நாமதிः த்வெவொ வாயஹஸெதாஜ ஹவெதிவ்ராணநாதிः ஶரணா மதி ரமெஷாம் ஸாஜெவெ த்ரவ்யயாஜ்ஞதாம் ॥ అహమస్మ్యప రాధానా మాలయోఽకించనోఽగతిః త్వమేవోపాయభూతో మేభవేతి ప్రార్థనామతిః శరణాగతిర గ్రేషాం సాదేవేత్రప్రయుజ్యతాం - என்றிருக்கிறபடி பகவானைப்பார்த்து நான் அபராதங்களுக்கு ஆலயமாயிருக்கிறேன்; அகிஞ்சநனும் அநந்யகதியாயிருக்கிற அடியேனுக்கு தேவரீரே உபாயமாகவிருந்து தேவரீரையடைவதற்கு ப்ரதிபந்தக மான ஸர்வபாபங்களையும் போக்கி தேவரீர் திருவடிகளையடையும்படி செய்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்து சரணாகதிசெய்து, பின்பு தேஹாவஸாந பர்யந்தம் இதரவிஷயங்களினுடைய தோஷத்தையும் பகவத்விஷயத்தினுடைய குணாதிக்யத்தையும் சொல்லுகிறசாஸ்த்ரங்களை உபதேசித்துத் திருத்தவொண்ணாதபடி விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போரும் சேதநனை ஸ்வஸௌந்தர்யாதிகளாலே சித்தாபஹாரம்பண்ணி வைமுக்யத்தைமாற்றி நித்யாநுபவம் பண்ணவேண்டுமென்கிற ருசியையுண்டாக்கி நித்யாநுபவம் பண்ணுகைக்குத் தானே உபாயமாய் உபாயமாக பரிக்ரஹித்தபின்பு நித்யவிபூதிக்குப் போமளவும் நிரதிசயபோக்யமாயிருக்கிற அர்ச்சாரூபமான எம்பெருமான் உகந்தருளின நிலங்களில் ஆதராதிசயமும் மங்களாஶாஸநமும் இதரவிஷயங்களில் அருசியும் ஆர்த்தியும் அநுவர்த்தந நியதியும் ஆஹாரநியதியும் அநுகூலஸஹவாஸமும் ப்ரதிகூலஸஹவாஸ நிவர்த்தியும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன் என்பதின்படி வர்த்தித்தால் பின்பு தேஹாவஸாந காலத்தில் பாஹ்யேந்த்ரியங்கள் அந்தக்கரணத்தில் சேர்ந்து, அந்தக்கரணம் ப்ராணனோடேசேர்ந்து, ப்ராணன் ஆத்மாவோடேஸம்பந்தித்து, ஆத்மா பூதஸூக்ஷ்ம

விசிஷ்டனுய்க்கொண்டு ஹ்ருதய கமலத்திலிருக்கும் பரமாத்மாவாகிய வாஸுதேவதருவினிடத்திலே சேர்ந்து, வெய்யல் காலத்தில் ஆதித்யகிரணத்தால் தப்தனானவன் நிழல்மரத்தைக்கிட்டி இளைப்பாறுமாபோலே ஸம்ஸாரார்க்க தாபிதனான இவன் இளைப்பாறி, த்வயவசநமே பாதேயமாகக்கொண்டு, ஹ்ருதயகமலத்தைப்பற்றியிருக்கும் நூற்றொருநாடியில் ஸுஷும்நையென்கிற நாடியின்வழியாய் ப்ரஹ்மரந்த்ரத்தை பேதித்துப்புறப்பட்டு ஆதித்யரஶ்மியையநுஸரித்துக்கொண்டு ப்ரணவரதத்திலேறி, அர்ச்சிராதிமார்க்கத்தாலே போகும்போது, ஊர்த்வலோகங்களிலுள்ளாரடைய உபஹாரபாணிகளாய் வந்து ஸத்கரித்து ஸேவித்து ஸ்தோத்ரம் பண்ணப்போய் ப்ரஹ்மலோகத்தையும் அண்டத்தையும் ஆவரணங்களையும் முடிவில் பெரும்பாழான மூலப்ரக்ருதியையுங்கடந்து, அம்ருதவாஹிநியான விரஜையில் தீர்த்தமாடி, ஸூக்ஷ்மசரீரத்தையும் வாஸநாரேணுக்களையும் போக்கிப் பின்பு 𑌸𑍂𑌰𑍍𑌯𑌕𑍋𑌟𑌿𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌶𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌨𑍍𑌦𑍍𑌵𑌯𑍁𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑌦𑍇𑌵𑌿𑌰𑌾𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑌂𑌸𑌾𑌰𑌬𑌨𑍍𑌧𑌨𑍈𑌃 ॥ సూర్యకోటిప్రతీకాశః పూర్ణేంద్వయుతసన్నిభః యస్మిన్పదే విరాజంతే ముక్తాస్సంసారబంధనైః॥ என்கிறபடி அநேகமாயிரம் ஸூர்யர்கள்சேரவுதித்தாற்போலேகண்கொண்டு காணவொண்ணாதபடி நிரவதிக தேஜஸ்ஸையுடையனாய் விரஜைக்கக்கரையி லெழுந்தருளியிருக்கிற அமாநவனைச்சென்றுகிட்டி அவர்திருக்கைகளாலே ஸ்பர்சிக்கப், பின்பு லாவண்யஸௌந்தர்யாதிகல்யாணகுணாகரமாய் சுத்தஸத்வமயமாய் பகவதநுபவைக பரிகரமாயிருக்கிற விக்ரஹத்தைப்பெற்று,முக்தனென்கிற திருநாமத்தையடைந்து ஸச்சிதாநந்தஸ்வரூபனாய்ப்பரமபதத்தில் விளங்கும் பரவாஸுதேவனையடைந்துஸாயுஜ்யத்தைப்பெற்று ஸந்ததாநந்தனாயிருக்கும்படியான மஹாபலத்தைப் பெறமுயல்வதேநலம். பரமபதத்திலேசென்றால்வரும் ஸாயுஜ்யமே மோக்ஷமென்கிறது. அதுக்குள்ளேஸஹஸ்ரத்தில்சதாதிகள்போலே ஸாலோக்யாதிகளெல்லாம் அந்தர்ப்பூதங்களாகையால்அங்கொருவர்க்கும்வைஷம்யமில்லை. 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌸𑌾𑌰𑍂𑌪𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇 𑌨 𑌕𑌦𑌾𑌚𑌨 𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂

[illegible] ஸ்ம்ருதி ॥ మోక్షం సాలోక్యసారూప్యం ప్రార్థయే న కదాచన ఇచ్ఛామ్యహం మహాబాహో సాయుజ్యం తవ సువ్రత॥ ஸாயுஜ்யமாவது: ஸயுக்கினுடைய பாவம். ஸயுக்காவான், ஒருபோக்யத்திலே போக்தாவாய்க்கொண்டு கூட அந்வயிக்குமவன். இங்கு ஸப்ரகாரப்ரஹ்மமாகிறபோக்யத்திலே ப்ரஹ்மமும் முக்தனுங்கூட போக்தாக்களாய் அந்வயிக்கையாலேமுக்தனை ஸயுக் என்கிறது. இப்படியாகில் ஶ்ருதியில் ஸாயுஜ்ய சப்தமும் ஸார்ஷ்டிதாசப்தமும் சேரப்ரயோகிப்பானேனென்னில், ஸாயுஜ்யமுபயோரத்ர போக்த்ருத்வஸ்யாவிஶிஷ்டதா ஸார்ஷ்டிதா தத்ர போகஸ்ய தாரதம்யவிஹீநதா ॥ సాయుజ్యముభయోరత్ర భోక్తృత్వస్యావిశిష్టతా సార్ష్టితా తత్ర భోగస్య తారతమ్యవిహీనతా॥

என்று முக்தனுக்கு ஜகத்வ்யாபாரமில்லையேயாகிலும், க்ருஷிபண்ணின பிதாவும் நிர்வ்யாபாரரான புத்ராதிகளுங்கூட க்ருஷிபலத்தை புஜிக்குமா போலே ஜகத்வ்யாபாரத்தால் வரும் ரஸம் வ்யாபரிக்கிற ஈஶ்வரனுக்கும் பார்த்திருக்கிற முக்தனுக்கும் துல்யம். ஸூத்ரகாரரும் ஜகத்வ்யாபாரவர்ஜம் ॥ జగద్వ్యాపారవర్జం என்று தொடங்கி, போகமாத்ரஸாம்யலிங்காச்ச ॥ భోగమాత్రసామ్యలింగాచ్చ என்றருளிச்செய்தார். ஸாமரஸ்யம் ஹி ஸாயுஜ்யம் வதந்தி ப்ரஹ்மவாதிந: ॥ సామరస్యం హి సాయుజ్యం వదంతి బ్రహ్మవాదినః॥ என்று ஸாகடாயநனும் சொன்னான். ஶப்தசக்தியன்றிக்கேயிருக்க பேதஶ்ருதிகளும் விரோதிக்க ஸாயுஜ்யஶப்தத்துக்கு ஐக்யம் பொருளாக நினைத்திருப்பார்க்கு, முக்தன் பரமஸாம்யத்தையடையுமென்றும் தாத்ருக்காமென்றும் சொல்லுகிற ஶ்ருதிகளும் விரோதிக்கும். மம ஸாதர்ம்யமாகதா: ॥ మమ సాధర్మ్యమాగతాః ॥ என்று கீதாசார்யனும் அருளிச்செய்தான். என்று ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸ்ரீமத் வேதாந்த தேசிகரருளிச்செய்தார்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪ | ௨௮ | సర్వ్యజ్ఞ | సర్వ్యజ్ఞ |
| ௭ | ௧௧ | నా౦ాయణః | నారాణాం |
| ௧0 | ௨௯ | ங்யாம்ய | நியாம்ய |
| ௧௪ | ௨0 | பணமிக்க | பரிணமிக்க |
| ௧௮ | ௧௬ | குண்யம் | க்ருண்யம் |
| ,, | ௧௯ | ஷி | ஷி |
| ௧௬ | ௬௪ | ஸுபாஶ்ரய | சுபாஶ்ரய |
| ௨௨ | ௧௬ | ஸதித்தார் | ஸாதித்தார் |
| ௨௬ | ௨0 | హంస్తౌ | హస్తౌ |
| ௨௫ | ௨௯ | పరా త్తచ్ఛ్లతే | పరాత్తుతచ్ఛ్లతే |
| ௨௮ | ௨ | ங்யாம்ய | நியாம்ய |
| ,, | ௧௭ | ఏవ | ఏవ |
| ,, | ௬0 | అపరి పవాహ | అహ ఏవాహ. |
| ௬௭ | ௩0 | వర్ణపంచన | వర్ణంపచన |
| ௪௪ | ௨௮ | ఘంరా | ఘో॥ |
| ௪௭ | ௨0 | ధనఞ్జః | ధనఞ్జయః |
| ௪௮ | ௪௮ | பயஸ்விநீ | யசஸ்விநீ |
| ௫௨ | ௩ | ங்த்ர | ரங்த்ர |
| ௫௫ | ௧௫ | మూతా | మూత్తా |
| ௫௯ | ௭ | ప్రద్యుమ్న | ప్రద్యుమ్న |
| ,, | ௧௪ | రాత్రం | రాత్రం |